Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம்
★
தமிழன் பிரஸ், ஈரோடு.

குடி அரசு

ESTD. 1924

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம்
★
நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 } ஈரோடு 1-5-1948 சனிக்கிழமை { மலர் 34.

நரக வாழ்வே மேலானது!

★

நரக வாழ்வு வாழ்வதாயிருந்தாலும் அங்கு நான் மனிதனாக மதிக்கப்படுவேனாகில் அவ்வாழ்வே இப்பூலோக வாழ்வை விட மேலென்று கருதுவேன்.

நரக வாழ்வு மட்டுமல்ல, அதைவிட பல கொடிய கஷ்டங்களை அநுபவிக்கப் பட நேரும் இடமானாலும் அவ்விடத்தில் நான் மனிதனாக மதிக்கப் படுவேன் என்றால் அவ்வாழ்வே இவ்விழி சாதி வாழ்வை விட சுகமான வாழ்வு என்று கருதுவேன்.

பெரியார் ஈ. வெ. ரா.

எதிரிகள் அல்லது துரோகிகள்?

★

யார் எங்கள் இழிவு நீக்கத்திற்கு அநுகூலமாயிருக்கிறார்களோ அவர்கள்தான் எங்கள் தோழர்கள். மற்றவர்கள் எங்கள் எதிரிகள் அல்லது துரோகிகள்தான்.

இவ்விழிவு நீக்கக் கொள்கைக்கு ஒரு அரசாங்கம் மாறுபட்டிருக்குமாயின் அவ்வரசாங்கம் ஒழிக்கப்பட வேண்டியதுதான்.

பெரியார் ஈ. வெ. ரா.

1948 MAY. 1948

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

பெண்கள் பகுதி:

தோழியர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

"சி. ஆர். விசாலக்குமி"

★

தோழியர்களே!

மேனாட்டிலே பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். எக்காரியத்தை முன்னிட்டும் ஆண்களைப் பெண்கள் எதிர்பார்ப்பதில்லை. ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் உழைக்கிறார்கள். நம் நாட்டிலே பெண்கள் அடிமை வாழ்வு வாழ்வதேன்? இதற்குக் காரணம் கல்வி குறைவு மட்டுமல்ல, வைதீகத் துறையிலே பெண்கள் ஆழ்ந்திருப்பதால்தான். ஆண்களைவிட பெண்கள்தான் சடங்கு, சாஸ்திரம் முதலிய மூடநம்பிக்கையிலே முதல் ஸ்தானம் பெற்றுள்ளார்கள். இதனால் பெண்கள் அடிமை மட்டுமல்ல! ஆண்கள் பெண்களை ஓர் விளையாட்டுக் கருவியாக வைத்துள்ளார்கள். திராவிடத் தோழியர்களே! வைதீகக் கோட்டைக்குள்ளே சடங்கு, சாஸ்திரம் என்னும் மதுவை உண்டு மயங்கி இருக்கும் மங்கையர்களே! கேளுங்கள்! ஈரோட்டிலே ஈ. வெ. ராமசாமி என்னும் ஒரு வைத்தியர் உங்கள் மயக்கந் தெளிய ஓர் அற்புத மருந்து கண்டு பிடித்திருக்கிறார். மருந்து என்றவுடன் மிரண்டு விடாதீர்! சாப்பிட்டுப் பாருங்கள். உங்கள் அறிவுக்குச் சிந்தனை தரும். சிந்தித்துப் பாருங்கள்! நாம் ஏன் அடிமை?

ஆண்களுக்கு நாம் ஏன் விளையாட்டுக் கருவி? நாம் என்ன பொம்மைகளா? நமக்கு ஏன் நகைகள்? காதணி, மூக்குத்தி, கைவிலங்கு (வளையல்) கால்விலங்கு (கொலுசு) கழுத்தணி, கழுத்துக்குத் தூக்கிட்டது போல நமக்கேன்? சிந்தித்துப் பாருங்கள்.

கற்பு என்பது விளையாட்டுக் கருவி அல்ல! அவல் கடலை அல்ல. ஆண்களுக்கு அள்ளிக் கொடுக்க **கற்புடைய மாதொருவள் பிறர் மனதிலுள் புகாள்!** கற்புடைய பெண் பிறர் மனதிலுங் கூட இடம்பெறக் கூடாது. கற்புள்ளவள் என்று சொல்லிவிடுவது தன்னை நன்றாய் அலங்கரித்துக் கொண்டு, பூவைத்துக் கொண்டு, குங்குமமிட்டுக் கொண்டு, மஞ்சள் பூசி, தவறினால் பவுடர் பூசி, கம்மல், லோலக், மூக்குத்தி, கைவிலங்கு, கால்விலங்கு இதெல்லாம் போட்டுக் கொண்டு விதவிதமான வெட்டுக்கை ஜம்பர், பட்டாளத்திலேதான் சிப்பாய்கள் சண்டைக்குப்போய், கஷ்டப்பட்டு மண்வெட்டி, பிறகு அவல்தார் என்னும் மூன்று கோடுகள் வாங்குகிறான். நம் பெண்கள் தையற்காரனிடம் கஷ்டப்படாமலே மூன்று கோடுகள் வாங்கிய ஜம்பர் போட்டுக்கொண்டு ஆண்களின் ஆபாசக் கண்களுக்கு வேட்டையாவது மின்றி, ஆ! அவள் எப்படி இருக்கிறாள் எனத் தன் துணைவனோடு போனாலுங்கூட ஒரு ஆணின் மனதிலே இடம் பெறுகிறாள்.

தோழியர்களே! தெருவிலே வயிற்றுக்கின்றி வதைப்படும் நம் இனத் தோழியைப் பார்! கந்தல் உடை, எண்ணெயே அறியாத தலை; என்றைக்கும் உழைக்கும் ஒரு பரிதாப முகம். ஏன்? ஆண்கள் அவர்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை என்று நான் கேட்கின்றேன். கூலி வேலைக்கு அவள் துணைவன் ஆணோடு போய்ச் சமமாக வேலை செய்யச்சொல்லி ஏன் அனுப்புகிறான் என்று நான் கேட்கின்றேன். அவள் பெண் இல்லையா? அவளுக்குக் காதல் உணர்ச்சி இல்லையா? சிந்தித்துப் பாருங்கள்.

நாம் நம்மையே பொம்மையைப் போல் ஆக்குகிறோம். அலங்கரிப்பு வேண்டாம், ஆபாச உருவம் வேண்டாம், நாம் நகை மாட்டும் ஸ்டாண்டுகளல்ல! தகர்த்தெறியுங்கள். வயிற்றுக்கின்றி வதைப்படுகின்றார்கள் ரோட்டிலே பெண்கள்! கல் கட்டடத்திற்குள்ளே கணபதிபோல் அமர்ந்திருக்கும் பொம்மைக்கு எத்தனையோ ஆயிரம் ரூபாய் பெறுமான நகைகள். இது நியாயமா? பகுத்தறிவு என்னும் உரைக்கல்லால் உரைத்துப் பாருங்கள். ஒரு முடிவுக்கு வாருங்கள். ஈரோட்டு வைத்தியன் கொடுத்துள்ள மருந்தை உட்கொள்ளுங்கள்! ஊக்கங்கொண்டெழுங்கள்! வெளிப்பட்டு வாருங்கள்!! பெண்கள் அடிமை அல்ல என்ற வீர முழக்கங்கொண்டு!!!

தோழியர்களே! சும்மா இருக்கலாகாது; யாராவது முதலில் வரட்டும், பிறகு நாம் போகலாம் என்று சமூகத்திற்குப் பயந்திருந்தால் பெண்கள் அடிமை, அடிமைதான். எல்லோரும் அப்படியே நினைத்திருந்தால் அமைதி நிலவ வேண்டியது தான். ஒரு கைதட்டினால் சப்தம் வராது. பல கைகளும் தட்டினால் தான் சப்தம் வரும். பகுத்தறிவு தந்த, தன்மான உணர்ச்சியை ஊட்டிய அந்த ஈரோட்டு வள்ளல் நம் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி மட்டும் பெண் அடிமை ஒழிக! வென்று கூறினால் போதாது. அவருடன் சேர்ந்து பெண்களும் வீர முழக்கமிடவேண்டும்.

கல்வி பெண்களிடத்திலே வளர வேண்டும். அதற்காகப் படித்த பெண்கள் முற்பட்டு வரவேண்டும். வைதீக நாசகாரக் கும்பலோடு படித்த பெண்களும் சேர்ந்து பாழாக வேண்டாம். பகுத்தறிவுப் பாசறைக்கு வரவேண்டுகிறேன்.

முகமூடி அணிந்துள்ள மேனாட்டு முஸ்லீம் பெண்கள் கூட இப்போது முக்காட்டை நீக்கி முகமூடி அணிய மாட்டோம் என வீரத்தோடு முன் வந்துள்ளனர். வைதீக, சடங்கு, சாஸ்திரமென்னும் மூடநம்பிக்கையுடைய நம் நாட்டுப் பெண்களின் முகமூடியை என்று விலக்குவது? நாட்டிலே நடமாடும் நகைப்பேய் என்று ஒழியும். அம்மா! எதிர்வீட்டுப்பொன்னம்மா ஒரு அழகான லோலக் போட்டுக்கொண்டு இருக்கிறாள். அதுபோல எனக்கும் வாங்கித்தாம்மா. உம், சரி, இந்த மாதம் எங்கேயாவது கடன் வாங்கிச் சாப்பாட்டிற்கு பார்த்துக் கொள்ளலாம். பிள்ளை ஆசைப்படுகிறது எனப் பெற்றோர் நினைத்துப் பெண்ணுக்கு லோலக் வாங்கிப் போட்டுவிட்டு, மாதமெல்லாம் அங்கேயும், இங்கேயுமாய் வட்டிக்கு ரூபாய் கடன் வாங்கி வயிற்றுக்குப் பாடுபடும் இந்தக் காலம் என்று ஒழிவது? நாட்டுப்பெண்களின் அடிமை ஒழிவது என்று? ஒழிக்க வருபவரை

கேள்விக்குப் பதில்.

"கைவல்யம்"

★

நீங்கள் குடிஅரசுப் பத்திரிகையில் இந்து மதங்களைப் பற்றியும், கடவுள் களைப் பற்றியும் கண்டித்து எழுதிக் கொண்டு வருகிறீர்கள்! இறந்தவர் களுக்குச் சடங்குகள், கருமாதிகள் இவைகள் எதுவும் செய்யக்கூடாது, இதெல்லாம் மூட நம்பிக்கை என்று எழுதுகிறீர்கள்! அதைநாங்கள் ஒத்துக் கொள்ளுகிறோம். ஆனால் நம் மகாத்மா காந்திக்கு மாத்திரம் ஏன் சடங்குகள்? அவருடைய சாம்பலுக்கு தினந் தோறும் ஆராதனையும், ஜெபம்செய்த பிறகு கடலிலும், ஏரிகளிலும் என் விடவேண்டும்? நாங்கள் மாத்திரம் கருமாதிகள் செய்தால், செய்யக்கூடாதென்று ஏன் சொல்லுகிறீர்கள்? இதற்குப் பதில் வேண்டுமென்று நமது வாலிபரில் சிலர் எனக்கு 'எழுதியிருக்கிறார்கள். கேள்வி பொருத்தமானதே. கேள்வி கேட்டவர்களே ஆலோசித்துப்பார்த்தால் உத்தரம் விளங்கிவிடும். எல்லோரும் தெரியவே கேட்டிருக்கிறார்கள். என்னால் அதிகம் விவரித்து எழுதுவது சாத்தியமில்லை. சுருக்கி எழுதுகிறேன். விட்ட இடத்திலெல்லாம் சேர்த்து உங்கள் புத்தியையும் கலந்து தெரிந்து கொள்ளுங்கள்.

பிதிர்க் கர்மம் என்பதும் அதைச் செய்வதும் இந்து சமயத்தின் முக்கிய பாகம். அதை விட்டு விட்டால் எல்லா மதங்களைப் போலாகி விடும். புரோகிதக்கூட்டத்திற்கு வேலையுமில்லை. ஏமாற்றித் தங்கள் குடும்பத்தையும், கூட்டத்தையும் நிலை நிறுத்திக் கொண்ட ரமண ரிஷியிலிருந்து வேதம் வரையிலும், பிதிர்க் கர்மத்திற்குப் பிரமாணம் காட்டுவார்கள். கருட புராணத்திலிருந்து உபநிஷத்து வரையிலும் பிதிர்க் கருமங்களிருக்கும். அந்தச் சாஸ்திரத்திற்கு இந்தச் சாஸ்திரம் பிரமாணம். அந்த ரிஷியின் மேற்கோளுக்கு இந்த ரிஷியின் மேற்கோள் அத்தாட்சி. எந்த இடத்திலும் ஆரம்பச் சந்தேகம் அப்படியே இருக்கும். அதை ஆட்சேபிப்பவர்கள் நாத்தீகரென்று தள்ளி விடுவார்கள். எந்தப் பார்ப்பாரும் அந்த இடத்தில் ஆட்சேபிக்க மாட்டார்கள். பிதிர்க்களைப்பற்றி இந்துவைதீகம் சொல்லுவதே சரி என்று இந்துக்களெல்லாம் நடந்து வருகிறார்கள்.. பிதிர்க்கள் பிதிர்க்களுக்குத் தேவதைகள், அவர்களை இரட்சிக்கும் தேவதைகள், தேவபிதிர்க்கள், அவர்களுக்கு மேல் அவர்கள் தகப்பனார்களான ரிஷிகள், அந்த ரிஷிகளைப் பெற்ற பிர்மா, இப்படியே பிதிர்க்களின் வம்சங்கள் சாஸ்திரத்தில் சொல்லப்படுகின்றன. பிதிர்க்களைப் பற்றியவைகள் யாருக்கும் தெரியக் கூடாதவை. அதிலும் இந்து சாஸ்திரத்திலெழுதி இருக்கும் பிதிர்க் கூட்டங்களின் கொடிவேலிப் பட்டியல் எந்தவிதமான புத்திக்கும் ஒத்துவராததாகவே யிருக்கும். பார்ப்பார் புத்திக்கு மட்டும் எப்படி ஒத்து வருகிறது என்றால், தெரிந்தோ, தெரியாமலோ ஒத்து வருவதால்தான் உலகமெங்குமில்லாத பார்ப்பார சாதி இங்கு மட்டும் நிலைத்திருக்கிறது.

இறந்து நரகலோகம் சென்ற பாவியையும், அமாவாசை, மாசஸங்க்ரமணம், ஸ்பதீபாதம், கிரகணம் முதலிய புண்ணிய தினங்களில் தமது புதல்வர் முதலியவர் செய்யும் சிரார்த்தாதிகளின் பயனைப் பெற்றுக் கொள்வதின் பொருட்டு, நரக வாதனையினின்றும் கரை ஏற்றப்படும். அச்சமயம் சிரார்த்தம் முதலியவைகளைச் செய்யாதிருப்பார்களாயின், அவர்கள் தம்பின்னவராகிய இப்பாவிகளைச் சபித்துக் கொண்டே நரகத்திலிருப்பர். ஆனது பற்றிச் சிரார்த்தம் முதலிய கர்மங்களால் இறந்தவர்களைத் திருப்தி செய்வித்தல் அவசியம் என்று இந்து மதம் சொல்லுகிறது. இங்கு நம்மவர் செய்யும் சிரார்த்தம் முதலியவைகளால் பிதிர்லோகத்திலுள்ளவராகிய பிதிரர் எனும் ஓர்வகைத் தேவரே நேரில் ஆராதிக்கப்படுகின்றனர். லோகாந்தரமடைந்த தாய், தந்தையர் முதலிய நம் முன்னோருடைய ஜீவாத்மா, அவர்கள் மூலமாக சிரார்த்தாதிகளைப் பெற்றுத்திருப்தியெய்துகின்றன. நாம் செய்யும் சிரார்த்தத்தை நேரில் பெற்றுக் கொள்வோர் பிதிரர் எனும் ஓர் தேவவகையினர். இவர்கள் நமது முன்னோர்களுக்குத் திவசத்தின் பயனைச் சேர்ப்பிப்பர் என்று புரோகிதர்கள் சொல்லுகிறார்கள்.

பிர்மதேவரால் உண்டாக்கப்பட்ட மனுப்பிரஜாபதியிடம் தோன்றியவர்களாகிய மரீசி முதலிய மகாரிஷிகளின் பிள்ளைகளே பிதிரர் என்பவராம். அவர்கள் ஸ்வர்க்கபேதமாகிய சந்திர மண்டலம் முதலிய இடங்களில் இருப்பவர்களாம். இங்கு செய்யும் சிரார்த்தம் முதலியவைகளில் நேரில் உபசரிக்கப்படுவோர்கள் இவர்களே இவர்கள்தானாம். லோகாந்தரத்தையடைந்துள்ள நம்முன்னோருக்கு அந்தச் சிரார்த்தத்தின் பயனைச் சேர்ப்பிக்கின்றனர். நான்குவருணத்தார்செய்யும் சிரார்த்தங்களில் பலவகைப்பட்டுள்ள இந்தப் பிதிரர் தனித்தனியே ஆராதிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்கள் ஸோமஸதர், அக்னிஷ்வாத்தர், பர்ஹிஷதர், ஸோமபர், ஹவிர்புஜர், ஆஜ்யபர், ஸுகாலினர் எனப்பலவகைப் பட்டிருக்கின்றனர். பிராமணர் செய்யும் சிரார்த்தத்தில் ஸோமபர் எனும் வகையினர் உபசரிக்கப்படுகின்றனர். க்ஷத்திரியர்கள் செய்யும் சிரார்த்தத்தை ஹவிர்புஜர் எனும் கூட்டத்தினர் கிரகித்துக் கொள்ளுகின்றனர். வைசியரது சிரார்த்தத்தில் ஆஜ்யபர் எனும் வகையினரும், சூத்திரர்கள் சிராத்தத்தில் ஸுகாலினர் என்னும் வகையினரும் உபசரிக்கப்படுகின்றனர். அக்கிதத்தர், கவ்வியர், பிரகிஷதர், அக்கிஷ்வாத்தர், ஸோமபர் ஆகிய இவ்வகையோர் எல்லோரும் பிராமணருக்கே பிதிரர். இவர்களெல்லாம் பிர்மாவினால் உண்டாக்கப்பட்டவர்களும், பிர்மாவின் மகனான மரீசியின் பிள்ளைகளுமாவார்கள். சூத்திரருக்கு ஸுகலிநர் பிதிரராம். வசிட்டரின்பிள்ளை சுகாலினர். வசிட்டர் பூலோகத்து ரிஷி. ஆனால் தெய்வலோகம் போய் வருவார். மற்றவர்களெல்லாம் தெய்வலோகத்துத் தேவரிஷிகள். வருணாச்சிரமம் பிதிர்லோகத்திலுமிருக்கிறது. பிதிர்களுக்குள்ளுமிருக்கிறது. இதை ஏன் எழுதினேன் என்றால் பிதிர்க்களையும் பிதிர்லோகங்களையும் தெரிந்து வையுங்கள். இங்கே பார்ப்பார்களுக்கு அரிசி, பருப்பு, தெட்சணை கொடுப்பதை நிறுத்தி விட்டால் தேவபிதிரரும், பிர்மாவின் பிள்ளை பிதிர்களும் செத்து மடிந்து போவார்கள். சிரார்த்தத்தில் பிதிர்க்கள் பிரியத்தோடு அங்கீகரிப்பது மாம்சமும், மீனும். அவர்கள் உண்பதும் அதுதான் என்றே சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. இப்பொழுது முட்டைக் கோசும், 'தக்காளிப்பழமும் பிரியமாம். பார்ப்பாருக்குத்தான், பிதிர் தேவர்களுக்குப் பிரியமானது தெரியும். சூத்திரமடையர்களான நமக்கென்ன தெரியும்? இவை நிற்கட்டும்.

இந்து மதஸ்தர்கள் சிரார்த்தம் செய்யவேண்டுமென்பது கட்டாயவிதி. மகாத்மாகாந்தியும் இந்துதான். மகாத்மாவைச் சேர்ந்த பந்துக்கள், நேரு, இராஜகோபாலாச்சாரி முதலியவர்களும் இந்துக்கள்தான். தீண்டாமை போகவேண்டுமென்று ஒன்றைச்சொன்னாரேயல்லாமல், இந்து மதத்திற்கு விரோதம் சொன்னதில்லை. வருணாஸ்ரமதருமத்தை அனுசரித்து மகாத்மாகாந்தி சொன்னதால்தான் பெரியார் மகாத்மாவை குற்றம் சொன்னார். "பிராஹ்மணோமமதேவதா"

[தொடர்ச்சி 14ம் பக்கம்]

தடுக்கவேண்டாம்! நாசகார சமூகமே! விலகிநில்!

பெண்கள் அடிமை ஒழியவேண்டுமானால் பெண்கள் இடத்திலே குடிகொண்டுள்ள இழிவைப் பெண்கள் ஒழிக்கவேண்டும்.

வந்த சுயராஜ்யம் என்ன செய்யப் போகிறது?

"மயிலை சீனி. வேங்கடசாமி"

சுயராஜ்யம் வந்தது. ஆனால், இன்னும் நிலைகொள்ளவில்லை. வந்த சுயராஜ்யம் நிலைத்து நின்று செயல் புரிய சில ஆண்டுகள் ஆகும். நிலை கொள்கிற வரையில், நாட்டில் குழப்பங்களும் கலகங்களுமாகத்தான் இருக்கும். ஏன்? சுயநலக்காரர்களும், பிற்போக்காளர்களும், ஏகபோகப் பேராசைக்காரரும், முதலாளிக் கும்பலும் வந்த சுயராஜ்யத்தை, அதிகாரத்தைத் தங்கள் பக்கம் திருப்பித் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ளப் பாடுபடுவார்கள். அதற்கு வேண்டிய தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் செய்துவருவார்கள். செய்து வருகிறார்கள். செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதிகாரம் தங்கள்கைக்கு வந்த பிறகு, பொது ஜனங்களின் நன்மையைக் கவனிக்காமல் சுயநலத்தையே கவனித்துக் கொள்வார்கள். இது எல்லா நாட்டிலும், எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் எப்போதும்நடந்து வருகிற இயற்கை. புதிதாகச் சுயராஜ்யம் பெற்ற எல்லா நாடுகளின் வரலாற்றையும் புரட்டிப் பார்ப்போமானால் சுயநலக்காரர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றப் பகீரதப் பிரயத்தனம் செய்து வந்த சதிகாரச் செய்கையைக் காணலாம். துரதிர்ஷ்ட வசமாக அதிகாரமானது சுயநலச் சதிகாரர்களின் கைக்குப் போய்விடுமானால் அந்தோ! அந்நாட்டின் கதி அதோ கதி தான். பொதுஜனங்களின் கையில் அதிகாரம் போகுமானால் அந்நாடு க்ஷேமமும் சுகமும் அடையும். ஆனால், சதிகாரக்கூட்டம் எப்போதும் சுய உருவத்துடன் வேலை செய்வதில்லை. பொது ஜனங்கள் ஊழியர் என்னும் போர்வையில் மறைத்துக்கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்யும்.

நமது நாட்டிலும், இந்த நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான், அதிகார பீடத்தில் இருப்பவர், திடபுத்தியுள்ளவர்களாகவும், உறுதியும், அறிவும், சாமர்த்தியமும் உள்ளவர்களாகவும் ராஜதந்திரமும் நல்லெண்ணமும் உடையவர்களாகவும் இருந்து சுயராஜ்யத்தைப் பொதுமக்களின் நன்மைக்கான முறையில் அமைக்க வேண்டும். அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர் சுயநலக்காரர்களாகவும், குறுகிய நோக்கம் உடையவர்களாகவும், முதலாளிக் கூட்டத்தின் கைப்பாவைகளாகவும் இருப்பார்களானால், நாடு சீர்குலையும்; நாட்டில் சச்சரவும், புரட்சியும், குழப்பங்களும் ஏற்படும். உள்நாட்டுக் குழப்பமும், கொந்தளிப்பும் ஏற்படும். இந்நிலை அபாயகரமானது.

சீன தேசம் 1912-ல் சுயராஜ்ஜியம் பெற்றது. அதாவது குடி அரசாக மாறியது. ஆனால் க்ஷேமம் ஏற்படவில்லை. முப்பத்தாறு வருஷங்கள் ஆகின்றன. இன்னும் சீன தேசம் சுகப்படவில்லை. உள்நாட்டுப் போரும், குழப்பமும், கூச்சலும், சஞ்சலமும், கவலையும் சீன தேசத்தில் இன்றும் தாண்டவம் ஆடுகின்றன. பொருளாதாரம் பெருகவில்லை. கைத்தொழில் விருத்தியாகவில்லை. விவசாயம் பெருகவில்லை. பஞ்சமும், பட்டினியும் மக்களை வாட்டுகிறது. லஞ்சமும், கைக்கூலியும் உத்தியோகஸ்தர்களிடையே நிலைத்து விட்டன. அமெரிக்கா தேசத்தினிடமிருந்து கடனாக வாங்கும் கோடிக்கணக்கான டாலர்கள் மாயமாய் மறைந்துவிடுகின்றன. சீனநாடு சுயராஜ்ஜியம் பெற்றும், அதிகாரமானது சுயநலச் சதிகாரர்களின் கையில் சிக்கிக் கொண்டது. ஆகவே, சீனதேசம் சுகப்படாமல் சீரழிந்து கொண்டிருக்கிறது. சுயநலம்படைத்த முதலாளிக்கூட்டத்தார் சீனநாட்டு அதிகாரத்தைக் கைவசப்படுத்திக் கொண்டு கோடானு கோடிச் சீனப் பொது மக்களைச் சீரழித்து வருகிறார்கள். பஞ்சமும், பட்டினியும், வறுமையும், ஏழ்மையும், துன்பமும், துயரமும், குழிந்த கண்களும், சுருங்கிய வயிறுகளும், சுயராஜ்ஜியம் பெற்ற சீன நாட்டில் இந்த முப்பத்தினான்கு ஆண்டுகளாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

அதே சமயத்தில் துருக்கியையும், ருஷ்யாவையும் பாருங்கள். சீனதேசம் சுயராஜ்ஜியம் அடைந்த சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் துருக்கியும், ருஷியா தேசமும் சுயராஜ்ஜியம் பெற்றன. பெற்ற சுயராஜ்ஜியத்தைச் சுயநலக் கூட்டத்தின் கையில் சிக்காதபடி கமால் பாஷாவும், லெனினும் சுயராஜ்ஜியத்தைப் பொது மக்கள் ஆதிக்கத்திற்குக் கொண்டு வந்தார்கள். உறுதியும் ஊக்கமும் அறிவும் ஆற்றலும் ராஜதந்திரமுமுள்ள கமால் பாஷாவும், லெனினும், பிற்போக்குள்ள சுயநலக்காரர்களின் கையில் சுயராஜ்யம் சிக்கிக்கொள்ளாதபடி தடுத்து ஜனங்களின் க்ஷேமத்துக்கான முறையில் ஆட்சி செய்தார்கள். அதன் பயனாகத் துருக்கியும் ருஷியாவும் இப்போது பல துறைகளிலும் முற்போக்கு அடைந்திருக்கின்றன. ஜனங்களும் க்ஷேமத்துடனும் சந்தோஷத்துடனும் வாழ்கிறார்கள். முன்னேற்றமும் அபிவிருத்தியும் வளர்ந்து வருகின்றன. ஏன்? ஹிட்லரின் பலத்த எதிர்ப்பை, ருஷியா எதிர்த்துப் போரிட்டு முறியடித்து வெற்றி பெற்றதோடு, உலகத்திலே வல்லரசாகவும் உயர்ந்துவிட்டது.

சீனா முதலில் சுயராஜ்யம் பெற்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

தூத்துக்குடி மாநாட்டில்

குடி அரசுப் பதிப்பகம் & பகுத்தறிவுப் பதிப்பகம் நூல்கள் அனைத்தும் எங்கள் புக் ஸ்டாலில் கிடைக்கும்.

நாதன் கம்பெனி, ஈரோடு.

ரோஜா முத்தையா

பெரியார் அவர்களின் சொற்பொழிவுத் தொகுப்பு.

(17—4—48ம் நாள் தொடர்ச்சி)

நெருங்கக்கூடப் பயப்படுவார்கள்.

இது மற்ற காங்கரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு எவ்விதத்திலும் விரோதமானதல்ல. அவைகளைவிட தீவிரமான கருத்துக்களையும் திட்டங்களையும் கொண்டதுதான் எங்கள் கழகம் என்று எங்கு வேண்டுமானாலும் சொல்வோம். சொல்லுவது மட்டுமல்ல, மெய்ப்பித்துங்காட்டுவோம். காங்கரஸ்காரனோ, கம்யூனிஸ்டோ நெருங்கக்கூட பயப்படும் ஆத்மார்த்தத் துறையில் நாங்கள் அஞ்சாது குதிக்கிறோம். ஆத்மார்த்தக்காரர்கள் நம்மைக் கண்டு அஞ்சும் அளவுக்கு மக்களுக்குப் பகுத்தறிவு ஊட்டி வருகிறோம். புராணக்காரனுக்கு மேலாக தத்துவார்த்தம் பேசுகிறோம். அவன் தத்துவார்த்தம் பேசினால் அவனுக்கும் மேலாக வேதாந்தம் பேசுவோம். அவன் வேதாந்தத்தைவிட்டு ராம கிருஷ்ணரின் சிஷ்யன் என்றால், நாங்கள் அவருக்கும் மேலான இராமலிங்கரின் சிஷ்யர்கள் என்போம். அவன் மோட்சத்தைப்பற்றி பேசினால் அதற்கும் நாங்கள் குறுக்கு வழிகாட்டியனுப்புவோம். சமுதாயத்தில் உண்மையான சமத்துவம் நிலவ வேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை.

சமத்துவம் என்றால் சமுதாயஇயல், பொருளாதாரஇயல், அரசியல், மொழியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் சமத்துவ சுதந்தரம் வேண்டுமென்பதுதான் எங்கள் கோரிக்கை. ஆகவே எங்களைச் சற்று தீவிரவாதிகள் என்று யாராவது கூறலாமே தவிர எங்களைப் பிற்போக்கானவர்கள் என்றோ அல்லது எங்கள் கொள்கைகளைப் பற்றி இவ்வளவு பெருமையாகக் கூறிக்கொள்ள அருகதையற்றவர்கள் என்றோ யாரும் கூறமுடியாது. நீங்கள் நான் ஏதோ அளப்பதாகவோ அல்லது உங்களை ஏமாற்றப் போகிறேன் என்றோ நினைத்துவிடக் கூடாது. சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் கூறுவதில் எவ்வளவு உண்மை இருக்கிறதென்று. மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன், எங்களுக்கு மந்திரிப் பதவி பெறவோ அல்லது ஒரு பிர்லாவாக ஆகவேண்டுமென்றோ விருப்பமில்லையென்று.

எங்களைக் குறைகூறுபவர் எவர்?

எங்களைக் குறைகூறியே தம்வாழ்க்கை வசதியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய ஏதோ ஒரு சுயநலக் கும்பல்தான் எங்கள் மீது குறை கூறிவருகிறதே ஒழிய எங்களைப் போன்ற ஒழுங்கான திட்டமுடைய ஒருஇயக்கம்இல்லையென்றே திடமாகக் கூறுவேன். எங்களுக்கு வேறு கழகங்களைப் பற்றிக் குறைகூற வேண்டிய அவசியமும் இல்லை. அப்படிக் குறைகூறுவதற்கோ அல்லது நம் மீது சுமத்தப்படும் அபாண்டப் பழிகளுக்கு அதேமுறையில் பதில் கூறவோ எங்களுக்குப் பத்திரிகை வசதியோ, பணவசதியோ, அதிகார வசதியோ, ஆள்வசதியோ இல்லை.

ஒரேவிளக்கு ஊருக்கெல்லாம் வெளிச்சம்.

அதனால்தான் நான் ஒருவனே ஊர் ஊராகச்சென்று சங்கதி வரவேண்டியிருக்கிறது. ஒரே விளக்குதான்எல்லா ஊருக்கும் வெளிச்சம்தரவேண்டியிருக்கிறது. ஒரே பத்திரிகைதான் எங்கும் பிரச்சாரம் செய்ய வேண்டியிருக்கிறது. நம்மீது குறைகூறும் காங்கரஸ் கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு ஆள் கூட்ட வசதி அதிகம். அவர்களிடம் அதிகாரமுண்டு ஆட்களைப் பயமுறுத்த. அஞ்சாதவரை அடக்கி வாய்ப் பூட்டுப் பூட்டவும் கள்ள மார்க்கட் செய்ய உரிமை அளிக்கவும் வசதியுண்டு அவர்களிடம். இதுவன்னியில் கோடிக்கணக்கான பணமும் ஆயிரக்கணக்கான பத்திரிகைகளும் அவர்களுக்குண்டு. இவையெல்லாம் நமக்கில்லாத காரணத்தால் தான் அவர்களின் புளுகுகளுக்கு அவர்களின் முறையிலேயே சமாதானம் தெரிவிக்க வாய்ப்பற்றவர்களாக நாம் இருந்து வருகிறோம்.

குறையிருந்தால் கூறுங்கள்.

அதனால்தான் உங்களைப் பகுத்தறிவு கொண்டு சிந்திக்கும்படி வேண்டுதல் செய்கிறோம். நாங்கள் கூறுவதெல்லாம் உண்மையென்றோ, சத்தியமென்றோ அல்லது நாங்கள் கூறுவதை கடுதாசியில் எழுதி நெருப்பிலிட்டால்கூட அழியாத அளவுக்குச் சுத்தமானதென்றோ கூறுவதில்லை. நாங்கள் ஏதாவது தவறு சொல்லியிருந்தால், தவறு செய்திருந்தால் அருள் கூர்ந்து தயை செய்து எடுத்துக் கூறுங்கள். நாங்கள் நன்றியறிதலோடு திருத்திக் கொள்கிறோம். அல்லது சமாதானம் தெரிவிக்கிறோம். நாங்கள் கூறுவதை அப்படியே நம்பிவிடவேண்டாம் என்றுதான் நாங்கள் உங்கள் பகுத்தறிவுக்கு விண்ணப்பம் செய்து வருகிறோம்.

சிந்திப்பது மனிததர்மம், அதுவே சுயமரியாதை.

நாங்கள் கூறுவனவற்றிற்கு எங்கு மறுப்பு கிடைக்குமென்று நீங்கள் தேடவேண்டும். யாராவது ஆட்சேபனை தெரிவிப்பார்களானால், கண் கொத்திப் பாம்புபோல் இருந்து கருத்துடன் கவனிக்க வேண்டும். பிறகு பொறுமையோடு ஒன்றையொன்று ஒப்பிட்டுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உங்கள் அறிவையே உண்மையான நுட்பமான திராசாகக் கொண்டு தீர்தரங்களை நிறுத்துப் பார்க்க வேண்டும். மாசிருக்கும், பாசி இருக்கும். களிம்பிருக்கலாம். அறிவு கொண்டு உரைத்துப் பாருங்கள். உங்கள் அனுபவத்தால் அலசிப் பாருங்கள். சிந்தித்துப் பாருங்கள். சிந்திக்க வேண்டியதுதான் மனிததர்மம். யார் எது சொன்னாலும் உங்கள் சொந்தப் புத்தி கொண்டு சிந்தித்துப் பாருங்கள். சுதந்தரத்தோடு உங்கள் அறிவைச் சட்டத்திற்கோ, சாஸ்திரத்திற்கோ, சமயசந்தர்ப்பத்திற்கோ, சமுதாயசம்பிரதாயத்திற்கோ, பழக்க வழக்கங்களுக்கோ அடிமைப்படுத்தாமல் சிந்தித்துப் பார்த்து முடிவு செய்யுங்கள். நாம் இதைத்தான் சுயமரியாதை என்கிறோம். சுயஅறிவு கொண்டு சிந்தித்துப் பார்ப்பதற்குத்தான் சுயமரியாதை என்று பெயர். ஒவ்வொருவரும் தம் சுயஅறிவு கொண்டு சிந்திக்க உரிமை பெற்றிருப்பதற்குத்தான் பூர்ண சுயேச்சை என்று பெயர். எதையும் பூர்ணமரியாதை கொடுத்துக் கேட்டு பூர்ண சுயேச்சையோடு ஆராய்ந்து முடிவுக்கு வாருங்கள்.

மனிதனை மனிதனாக்குவது சிந்தனை.

இச்சிந்தனாசக்திதான் மனிதனை மிருகங்களிடமிருந்தும் பட்சிகளிடமிருந்தும் பிரித்துக் காட்டுவதாகும். மிருகங்கள் மனிதனைவிட எவ்வளவோ பலம் பெற்றிருந்தும் அவை அவனுக்கு அடிமைப்பட்டிருப்பதற்கும் இதுதான் காரணம். கழுகு 1½ மைல் உயரப் பறந்து கொண்டிருக்கும் போதே தரையிலுள்ள ஒரு சிறு பாம்பைக்கூட கண்டு பிடித்துவிடும். பார்வையில் அது நம்மைவிட அதிகச் சக்தி பெற்றிருக்கிறது என்பதற்காக நாம் அதை மேம்பட்டதாக ஒப்புக் கொள்ளுகிறோமா? ஆகவே மனிதனிடமுள்ள வேறெதச் சக்தியைக் காட்டிலும், பகுத்தறியும் சக்திதான் அவனை மற்ற எல்லா ஜீவராசிகளைக் காட்டிலும் மேம்பட்டவனாக்கி வைக்கிறது. ஆகவே அதை உபயோகிக்கும் அளவுக்குத்தான் அவன் மனிதத் தன்மை பெற்றியங்குவதாக நாம் கூறமுடியும். பகுத்தறிவை உபயோகியாதவன் மிருகமாகவே கருதப்படுவான்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

சுயராஜ்ஜிய சர்க்காராம்!

சோற்றுக்கே வழியில்லை.

★

நாட்டில் உணவு நிலைமையைக் குறித்துத்தேசியதினசரிப்பத்திரிக்கைகளில் வந்தவைகளைத் தொகுத்து கீழே தரப்பட்டிருக்கிறது.

தற்சமயம் இராஜபாளையம், ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆகிய இரண்டு இடங்களிலும் அரிசி கிடைப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ரூபாய் ஒன்றுக்கு முக்கால்படி அரிசி கூடக் கிடைப்பது அரிதாயிருக்கிறது.

* *

சென்னை மவுண்ட்ரோட்டில் பட்டினி காரணமாக ஒருவன் குற்றுயிராகக் கிடந்தான். ராயப்பேட்டையில் ஒருவன் இறந்தே போனான்.

* *

கடந்த பல மாதங்களாகத் தென் கன்னட மக்கள் படும் கஷ்டம் கூறத் தரமன்று. நிவாரணக் கடைகள் என்பதெல்லாம் வெறும் கேலிக்கூத்து. உண்மையில் அக்கடைகளால் நிவாரணம் ஒன்றும் கிடையாது.

* *

சமயபுரம் அருகாமையிலுள்ள மணச்சநல்லூரில் சென்ற சில தினங்களாக உணவுத் தானியங்களுக்கு ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். பொது மக்களில் சிலர்கூடி ஒரு ஏற்பாடு செய்து பிள்ளையார் கோவிலில் அரிசியை வைத்துக்கொண்டு ரூபாய்க்கு ஒண்ணேகால்படிவீதம் சப்ளை செய்து வருகிறார்கள்.

* *

திருவானைக் காவலில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. நெல் விலை சர்க்கார் திட்ட விலைக்கு மேல் இரட்டிப்பாய் விட்டது. பொது மக்கள் அரிசிக்கு அலைந்து திரியும் காட்சி பரிதாபகரமானது. ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் பங்கீடு எடுத்த பிறகு இது வரையிலும் பொதுமக்களுக்கு அரிசி கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரியவில்லை.

* *

திருத்தணியில் அரிசிப் பஞ்சம் அளவு கடந்துள்ளது. அரிசியின் விலை வேளைக்கு வேளை விஷம் போல் ஏறிக்கொண்டே போகிறது.

திருத்தணியிலிருந்து லாரிகள் மூலம் வெளியே அரிசி ஏற்றுமதி செய்யப்படுவதால் இந்த நிலைமை மோசமாகிறது.

* *

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் லால்குடி தாலூக்காவை நெற்களஞ்சியம் என்று சொல்லுவார்கள். இங்கு எங்கு பார்த்தாலும் நஞ்சை நிலங்கள். இங்கு இப்போது அரிசியைக் காண்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. ரூபாய்க்கு ஒருபடி அரிசி விற்கப்படுகிறது. ஜனங்கள் அரிசிக்குப்படும் கஷ்டம் காணக் கண்றாவியாக இருக்கிறது.

* *

வட ஆற்காடு ஜில்லாவில் உணவு தானிய விலைகள் மிக அதிகரித்து விட்டது. ஒரு சேர் அரிசி அரை ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

* *

செங்கற்பட்டு ஜில்லா மதுரமங்கலம் பிர்க்கா காந்தூர் கிராமத்தில் ஜனங்கள் பல தினங்களாக ஒரு வேளை சாப்பாடு கூட இல்லாமல் பட்டினி கிடக்கிறார்கள். உள்ளூரில் அரிசி கிடைக்கவில்லை. 10, 15 மைல் நடந்து சென்று வாங்கி வருவதானாலும் ரூபாய்க்கு ஒருபடி அரிசிதான் கிடைக்கிறது.

* *

ஈரோட்டில் அரிசி விலை ஏறிக்கொண்டே போகிறது. லாரியில் அரிசி வெளியூர்களுக்குப் போனவண்ணமாக இருக்கிறது. உணவுப் பிரச்னையைத் தீர்க்க சர்வ கட்சி அமைப்பு ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

★

சபாஷ்!

அவினாசிலிங்கத்தின் அருமையான பதில்.

21—4—48 தேதி சென்னை அசெம்பிளியில் கேள்வி நேரத்தின் போது.

ராகவய்யா கேள்வி:— பிராமணர், பிராமணரல்லாதார் வேற்றுமையைச் சர்க்கார் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கின்றனரா?

கல்வி மந்திரி பதில்:— பிறப்பு முதல் இறப்பு வரை இவ்வேற்றுமை இருக்கும் வரை அவற்றைச் சர்க்கார் எப்படி அங்கீகரிக்காமலிருக்கமுடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

கோவில்

பெருச்சாளிகளின் குறும்பு.

கவர்னர்-ஜெனரல் லார்ட் மவுண்ட்பேட்டன் கோஷ்டியார் சீரங்கப்பட்டணத்திலிருக்கும் சீரங்கநாதர் கோவிலுக்குள் சென்றதால், அக்கோவில் தீட்டுப்பட்டு விட்டதாகக்கூறி கோவில் அர்ச்சகர்கள் கோவிலை மூடிவிட்டார்கள். மைசூர் சர்க்கார் கண்டிக்கப்பட்டதன் பேரில் கோவில் திறக்கப்பட்டிருக்கிறது. அர்ச்சகர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்போவதாகச் சர்க்கார் கூறுகிறது.

தோழர்களே, கவனியுங்கள்!

ஆபீஸ் சம்பந்தமான தபால்களில் யாருடைய பெயரும் குறிப்பிடாமல் "ஆசிரியர், குடி அரசு" என்றும், "மானேஜர், குடி அரசு" என்றும், "மானேஜர், பகுத்தறிவுப் பதிப்பகம்" என்று மட்டும் விலாசமிட்டு எழுதி அனுப்பவேண்டுகிறோம்.

அவ்வாறில்லாத தபால்களைக் கண்டிப்பாய் நம்மால் கவனிக்கப் படமாட்டாது. நிர்வாகி.

குழந்தையைக் காணோம்.

எனது 7வயதுள்ள பெண் குழந்தையை ஏப்ரல் 22ம் நாள் பிற்பகலிலிருந்து காணவில்லை. 3, 3½அடி உயரமுள்ளவள். சீட்டிப் பாவாடையும், கவுனும் அன்று அணிந்திருந்தாள். ஆபரணமெதுவுமில்லை. பெயர் மங்களம்.

இக்குழந்தையை நீங்கள் காண்பீர்களானால், அல்லது கேள்விப் படுவீர்களானால் தயவு செய்து "குடி அரசு" நிலையத்திற்குத் தெரிவிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

கெ. ராசு, ஈரோடு.

குடிஅரசு சந்தாதாரராகச் சேர்ந்து விட்டீர்களா? இல்லையானால்,

தூத்துக்குடி மாநாட்டில் நாதன் கம்பெனி புக்ஸ்டாலில் ரூ. 1-0-0 (ரூபாய் ஒன்று) அட்வான்ஸாகச் செலுத்தி "குடிஅரசு" சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். பாக்கித் தொகையை ஒரு மாதத்தில் அனுப்புங்கள்.

மூட நம்பிக்கை

—:இங்கர்சால்:—

தமிழாக்கம்: அரங்கண்ணல்.

ஏடன் தோட்டத்திலே சாத்தான் பெற்ற வெற்றியின் காரணமாகவே கிருஸ்து வரவேண்டிய அவசியமும், அவரை வழிபட வேண்டிய நிலையும், சேவியர் சிலுவையில் அறைபடவுமான நிலையும் ஏற்பட்டதாகக்கூறப்படுகிறது.

சாத்தான் இல்லையென்றால் கிறித்துவப் போதனைகள், உண்மையற்றவைகளாக, சுக்கு நூறாகி உடைந்து சிதறடிக்கப்பட்டு விடும்! நமது மூதாதையர், குருமார், பாதிரிகள், வைதீகர்கள் கட்டி வைத்த —தப்பும் தவறும்கலந்த, ஆச்சரியமும் அற்புதமும் நிறைந்த, காட்டுமிராண்டித்தனமான பொய் புனைக்கதைகள்—சப்பைக் கட்டுகளாக வைக்கப்பட்ட, இரத்தத்தினாலும் எரிநெருப்பாலும் சூழப்பட்ட-கிறிஸ்துவ மதத்தின் அடிப்பீடம் ஆட்டங்கண்டு விடும். கிறிஸ்துவ மதமே அடையாளமற்றதாக ஆகிவிடும்!

சாத்தான், கெட்ட ஆவி ஆகியவைகள் பேரில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையை விட்டு விட்டால் மந்திர சக்தி வாய்ந்தவர் ஒரு பொழுதும் வாழ்ந்ததில்லை—இருந்ததில்லை என்று கூற வேண்டியவர்களாக ஆவோம். அறிவுள்ள எந்த மனிதப் பிறவியும் பில்லி, சூனியம், மந்திர சக்தி என்பவைகளை இப்பொழுது நம்புவதில்லை. ஆயிரமாயிரம் கபடு சூதறியாத ஆடவர் பெண்டிர், குழந்தைகள் ஆகியோர் பில்லி சூனியத்துக்குப் பயந்து நடுங்கிச் செத்தனர்; நமது மூளைகள் நம்பிக்கையால் சூழப்படாமலிருந்தால், நமக்கு மந்திர சக்திகளைப்பற்றிப்போதித்தசகல நூல்களும், அறியாதவர்களால், மூடநம்பிக்கைக்கு இரையானவர்களால் எழுதப்பட்டது என்று அப்பொழுதே புரிந்து கொண்டிருப்போம்; கிறிஸ்துமத பழைய ஆகமத்தில் மந்திர சக்திகளைப்பற்றிய சங்கதிகள் மலிந்து கிடக்கின்றன என்ற உண்மைகளெல்லாம் இப்பொழுது நமக்குத் தெரிந்தவைகளாகும்! புனித நூலின் பிரகாரம் பழைய ஆகமப்(Old Testament)படி ஜேகோவா மந்திர சக்தி, பில்லி சூனியம் ஆகிய நம்பிக்கைகளுக்கு ஆட்பட்டவர் என்பதும் அவருடைய வழிபற்றியவர்களிடம் 'ஒரு சூனியக்காரி வாழ்வதற்காக நீ துன்பப்படக்கூடாது' என்று சொன்னதாகவும் அறிகிறோம்!

இந்தச் சாதாரண வாக்கியம்—இந்த ஒரு வாக்கு—ஜேகோவா கடவுள் அல்ல என்பது மட்டுமல்ல ஒரு சாதாரண, அறிவில்லாத, மூடநம்பிக்கையில் முழுகிய நாகரிக வாடையே வீசாத ஒரு ஆள் என்பதையும்; பழைய ஆகமம் மனிதர்களால், நாகரீகமற்ற காட்டு மிராண்டிகளால் எழுதப்பட்ட தென்பதையும் எந்தவிதமான அய்யப்பாடுமின்றி வெட்ட வெளிச்சமாக நிரூபிக்கிறது!

'பில்லி சூன்யம்—மந்திரசக்தியின் பேரிலுள்ள நம்பிக்கையை விடுவது, பைபிள் மீது நம்பிக்கையை விட்டு விடுவதற்கொப்பாகும்' என்ற ஜான் வெஸ்லியின் கூற்று மிகவும் பொருத்தமென்றே கூறவேண்டும்!

சாத்தான் மீதுள்ள நம்பிக்கையைவிட்டு விட்டால் வேதப் புத்தகத்தைக் கொண்டு என்ன பயன்?

தேவதைகள் ஆகாயத்தில்வட்டமிடும்; பக்தர்களை—நல்ல மனிதர்களைப் பாதுகாக்கும்; தொட்டிலில் தூங்கும் குழந்தைகளை கண் இமைகளாக இருந்துகாப்பாற்றும்; குழந்தைகள் நல்ல கனவுகளைக் காணுமாறு செய்து அவர்களை மகிழ்ச்சியில் வைக்கும்; தேவதைகள் வரவு, கும்பிருட்டு குவிந்து கிடக்கும் அறைகளைப் பிரகாசமுள்ளதாக—ஒளி மயமாக ஆக்கும் என்றெல்லாம் நம்பப்பட்டது! கெட்ட ஆவிகள் இருந்தன என்பது பற்றி எவ்வளவு (?) ஆதாரங்கள் நமக்குத் தெரியுமோ அவ்வளவு தான் நல்ல ஆவிகள் பற்றியும் நமக்குத் தெரியும்!

சிந்தித்துப் பார்க்கும்தன்மையே யற்றவர்கள், "ஆதாரம் ஏதாவது உண்டா" என்ற எண்ணமின்றி, எதையும் அலசிப்பார்க்காது முடிவுகட்டி விடுபவர்கள் அவைகள் இருக்கின்றன என்பதை நம்புவார்கள்.

* *

மாதா கோவில் வேலை மிக மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. சுறுசுறுப்புடன் கட்டிட வேலையில் ஈடுபட்டிருந்த அங்கலோ சில தேவதைகளை ஆங்காங்கே ஓவியமாகத் தீட்டியிருந்தான். ஓவியங்களைப் பார்வையிட்டுவந்த கத்தோலிக்க மதக்குரு 'ஏனப்பா இது என்ன? தேவதைகள் காலில் செருப்பு அணிந்து கொண்டிருப்பதாக வரைந்திருக்கிறாயே. தேவதைகாலில் செருப்புப் போட்டுக் கொண்டிருக்கிறதா?' என்று கேட்டாராம். அதற்கு உடன் பதில் கூறிய ஓவியர், 'செருப்பு அணியாமல் தேவதை இருந்ததை யார் பார்த்தவர்?' என்று மற்றொரு கேள்வியை விடுத்தாராம்.

* *

'தேவதைகள் இருக்கின்றன' என்பதை இதுவரை யாரும் உறுதியாகக் கூறியதில்லை. அந்த நம்பிக்கை யேற்படுமாறு விளக்கப்பட்டதுமில்லை! தெய்வப் பிறவிகள், பரலோகவாசிகள் என்பவைகள் இருப்பதாக லட்சோப லட்சம் மக்கள் நம்பியதும், தன்பக்தர்களைக் காப்பதற்காகச்சிங்கங்களின் வாய்களைத்தேவதைகள் கட்டியதுமான எண்ணற்ற நம்பிக்கைகளுக்கு அவர்கள் உள்ளாகிக் கிடந்தனர் என்பதும் நமக்குத் தெரியுமென்பதோடு சிந்தித்துப் பார்க்காத தன்மை, மூடத்தனமாகக் கொண்ட பக்தி வெறி, வைதீகத்தின் மீதுவைத்த நம்பிக்கை ஆகியவைகளே அவர்கள் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கைக்குக் காரணமென்று நமக்குத் தெரியும்!

தேவதைகள் என்பது வந்ததில்லை—எப்பொழுதும் வராது! தொல்லையால் அடிபட்ட எந்த மனித இதயத்துக்கும் அவைகள் சாந்தியை, மன அமைதியை உண்டாக்காது. இறகு முளைத்த—வான பூமியில் வட்டமிடும் தன்மை வாய்ந்ததாகக் கூறப்படும் இந்தத் தேவதைகள் பக்தர்களைக் காப்பாற்றாது; துன்பப்பட்டவர்கள் துயரைத் துடையாது; ஏழை எளியவர்கள், அனாதைகளுக்கு 'ஆதரவு' என்ற வார்த்தையைக்கூட முணுமுணுக்காது. இவைகள் யாவும் நடக்க முடியாத கனவுகள்!—அதுவும் பகற்கனவுகள்!!

(வரும்)

குடி அரசு

1—5—48 சனிக்கிழமை.

மே தினமும் திராவிடர் கழகமும்.

★

சுயநலமும் தந்திரமுமே கருத்து ஆக, ஆணவப் போக்கில் முற்றிய அகங்காரமே செயல் ஆக, பாடுபட்டுழைக்கும் பாட்டாளித் தோழர்களைப் பயப்படுத்தியும் மிரட்டியும் வேறுபாதை யறியாத செக்கு மாடுகளாகப் பழக்கி, வாழ்க்கையில் உடல் துன்பமே யறியாத உன்மத்தர்களாய், ஆண்டவனின் அவதாரங்களாய் இருந்த அரசர்களும், குட்டி ராஜாக்களும், ஆண்டவனோடு இரண்டறக் கலக்கும் அற்புதப் பணியை நடத்தி வைக்க, பகலிரவு என்பதைப் பாராமல் உழைக்கும் பண்புடையவர்களாய், அவனருளாலே அவனால் அனுப்பி வைக்கப்பட்ட மத குருமார்களும், அவர்களுக்குத் துணைசெய்ய அவனருளால் அவன் இச்சையின்படி சேர்த்து வைக்கப்பட்ட கன்னிமாடப் பெண்களும் தொலைந்து, அழிக்கப்பட்டு "அவனருள்" "அவன் செயல்" "அவன் இச்சை" "அவன் அவதாரம்" என்பதெல்லாம் அர்த்தமற்ற சொற்களாக்கி, "மனிதனருள்" "மனிதன் செயல்" "மனிதன் இச்சை" "மனிதன் பிறப்பு" என்கிற அர்த்தம் விளங்குகிற சொற்களைக் கையாண்டு, மனித ஆட்சி, மனித நடத்தை என்பவைகளைச் செயலுக்குக் கொண்டு வந்து, உழைப்பவனுக்கே உலகம் என்று உரிமைச் சீட்டு எழுதிய நாள் இந்த நாள்.

மனிதனின் உழைப்புக்கு மதிப்புக்கொடாமல், மனிதத் தன்மையைப் பற்றிக் கவலைப்படாமல், பொதுவுக்கு நன்மையைக் கொடுக்கும் அறிவுக்கோ, ஒழுக்கத்துக்கோ இடங்கொடுக்காமல், வேஷதாரிகளான மதவாதிகளும் அவர்களின் பாதுகாவலர்களான முடிதாங்கிய, தடிதூக்கிய அரசுகளும் செய்துகொண்ட ஒப்பந்த ஷரத்துகளின்படி, "உனக்கும் பேப்பே நொப்பனுக்கும் பேப்பே" என்று ஏமாற்றி வந்த குள்ள நரித்தனத்திற்கு விடுதலைச் சீட்டுக் கொடுத்து, உழைப்புக்கும் நேர்மைக்குமே உலகமுண்டு, வாழ்வுண்டு! ஊதாரி வாழ்வுக்கு இடமில்லை காண்பீர்! என்று முழக்கிய மே முதல் நாள் இந்த நாள்.

இந்த நாள் வாழ்க! இதன் அடிப்படை உலகின் ஒரு பகுதியுடனில்லாமல் உலகம் முழுவதும் வியாபித்து நிற்க இந்த நாள் வளர்க! ஓங்குக!

மதத் திமிரும் அதிகாரத் திமிரும் ஓங்கி உயர்ந்து உச்சாணிக் கிளையிலிருந்து உலுக்கிக் கொண்டிருக்க, அந்தக் குரங்குப் பிடியை ஓட்டிவிடும் முயற்சி உலகின் ஒவ்வொரு பகுதியிலும் நடைபெறுகிறது என்கிற அடையாளமே, இந்த மே தினம் இன்று உலகின் பல பகுதிகளிலும் விழா நாளாகக் கொண்டாடப்படுகிறதெனலாம்.

உலகத்தின் பல நாடுகளிலேயும் இந்த மே தினம் கொண்டாடப்படுகின்றதென்றால், அதனால் ஏதாவது ஒருபயன் ஏற்படுகின்றதென்றால், கொண்டாடுவதற்கான காரணமும், கொண்டாடுகின்ற முறையும், கொண்டாடுவதனால் விளையும் பயனும் நாட்டுக்கு நாடு வேறுபட்டே காணப்படுகின்றது என்பதையும், சிலநாடுகளில் வெறும் அய்தீக அளவில் தான் கொண்டாடப் படுகின்றதென்பதையும், மேதின விரும்பிகளான நம் நாட்டுத் தோழர்கள் நன்கு அறிந்து கொள்ளவேண்டும்.

மேதினம் ஒரு புரட்சி நாள். உண்டு கொழுக்கும் சோம்பேறிக் கூட்டத்திற்கு இடமில்லாமல், ஆண்டவன் திருவிளையாடல் நிகழும் அக்கிரமத்திற்கு இடமில்லாமல், பாப புண்ணிய அடிப்படையில் உலக மக்கள் என்கிற போக்கைமாற்றி, பாடுபடுபவன் பாடுபடாதவன் என்கிற அடிப்படையில் அதாவது தலைகீழ் மாற்றமான அடிப்படையில் நடத்திய புரட்சிவெற்றி பெற்ற நாள் இந்த மேதினம். மேதினம் விரும்பும் தோழர்கள் இந்த அடிப்படையை முதலில் மனதில் கொள்ளவேண்டும்.

மே தினம் உற்சவ நாளாக, உத்தமர்கள் அவதாரம் செய்த நாளாக, புண்ணிய நாளாக அந்த மனப்போக்கில் கொண்டாடப்படுமானால் அது பெரும் ஆபத்து. இதையும் மேதின விரும்பிகள் நெஞ்சில் கொள்ளவேண்டும்.

இந்திய உபகண்டத்தில் இந்த மே தினம் கொண்டாடும் வழக்கம், ஏறக்குறைய 20 ஆண்டுகளாகப் புகுந்திருந்தாலும், திராவிட நாட்டில் பத்துப் பதினைந்து ஆண்டுகளாகத்தான் கொண்டாடப்பட்டு வருகின்றது. அப்போதே தலைவர் பெரியார் அவர்கள் மே தினம் கொண்டாடவேண்டிய அவசியத்தையும், கொண்டாடும் முறையையும் விளக்கி அறிக்கை வெளியிட்டும் மேடைகளில் பேசியும் வந்திருக்கின்றார்கள். நம் சுயமரியாதைத் தோழர்கள் அந்த முறையைப் பின்பற்றி மே தினம் எப்படி அமெரிக்கப்பாட்டாளிகளின்மேன்மைக்கு வழி வகுத்த தினமாக மாறியது என்பதை விளக்கி வந்திருக்கின்றார்கள், விளக்கியும் வருகின்றார்கள்.

இன்று இந்தியக் கம்யூனிஸ்ட் தோழர்களும், சமதர்ம வீரர்களும் ஆங்காங்கே போட்டி போட்டுக் கொண்டு இந்த மே தின ஆர்ப்பாட்டஞ் செய்வதைக் கேட்கிறோம். இந்திய யூனியனின் காங்கரஸ் அரசாங்கமும், தொழிலாளர்கள் விரும்பினால் இதை விடுமுறை நாளாக விட்டு விடுமாறு அதாவது தனக்கும் இந்த மே தினத்தில் ஈடுபாடுண்டு என்பதைக் காட்ட உத்தரவு செய்திருக்கிறது.

மே தினத்திற்கும் பார்ப்பனப் பண்ணையான காங்கரஸ் ஆட்சிக்கும் எப்படி எந்த வகையில் தொடர்பிருக்க முடியும்? பார்ப்பன பனியாக்களின் கூட்டாட்சிக்கு மே தினம் எப்படி அநுதாபத்துக் குரியதாகத்தான் இருந்துவிட முடியும்? பூசுரர்களின் தலையில் கொள்ளி வைத்து பூசுரர்கள் பூண்டையே இல்லாதொழித்த மே தினம், பூசுரர்களால் எப்படிவரவேற்கப்பட முடியும்? பூசுரத் தலைமைக்குள்ளான கம்யூனிஸ்டுகளும், சோஷியலிஸ்டுகளும்தான் அதை எப்படி மனமொப்பி வரவேற்று அதன் உண்மைத் தத்து

வத்தை அங்கீகரித்துவிட முடியும்?

அயல்நாட்டுக் கொள்கையின் பேரில், ருஷ்யாவின் கண்ணில் மண்ணைத் தூவுகிறோம் என்று எண்ணிக்கொண்டு, சமதர்ம சிங்கம் ஜவஹர்லால் ஆட்சியில் மே தின விடுமுறை விடப்படுவதிலே ஒரு பொருள் இருக்கின்றது என்று கொண்டாலும்கூட, மேதினத்தை அதாவது பூசுரர்களின் சல்லிவேர் பொசுக்கப்பட்ட நாளை, ஜோஷிப் பார்ப்பனர் ஆட்டி வைக்கும் கம்யூனிஸ்ட் கட்சியோ, ஜெயப்பிரகாஷ் பார்ப்பனர் ஆட்டிவைக்கும் சோஷியலிஸ்ட் கட்சியோ கொண்டாடுவதை, ஏமாற்றம் பித்தலாட்டம் என்கிற முறையைத் தவிர வேறு எந்த நியாயமான முறை என்று கூறிவிட முடியும்? என்று கேட்கிறோம்.

வர்க்க ரீதியான போராட்டம் என்ற பெயரால், தொழிலாளி—முதலாளி ஆகிய இருவருடைய இருவேறான நிலையையும் அழிந்து படாமல் காப்பாற்றி, தொழிலாளி தொழிலாளியாகவே பிறந்தான்; தொழிலாளியாகவே வாழ்வான்; தொழிலாளியாகவே சாவான், அதற்கு நாங்கள் கியாரண்டி, ஆனால் தொழிலாளிக்குக்கூலி உயர்வு கொடு! என்று முதலாளிகளிடத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டு தொழிலாளர்களிடத்தில் பேரம் பேசும் இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளை, இந்த ஒப்பந்தத்திற்காக அல்லது முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையேயுள்ள தரகர்களான தங்களின் வயிற்றுப் பிழைப்புக்காகப் பல ஏழைக் குடும்பங்கள் பட்டினி கிடந்து பலர் சோத்துக்கில்லாமலும் துப்பாக்கி முனையாலும் செத்து மடியக்காரணகர்த்தர்களாயிருக்கும் இந்தியக் கம்யூனிஸ்டுகளைத், தீவிரமாகக் குறைசொல்லும் சமதர்ம வீரர்களின் யோக்கியதைதான் என்ன? கம்யூனிஸ்டுகளைவிட இவர்களின் நடத்தை, நாணயம் எந்த வகையில் மேம்பட்டுவிட்டது என்று சொல்லிவிட முடியும்?

வர்ணாச்சிரம முறையை அழித்தொழிக்க மனதாலும் எண்ணாதவர்கள்; மக்கள், மக்கள் என்ற தத்துவத்தை அழித்து அதாவது மக்களுக்குள் சமவுரிமையை ஒப்புக்கொள்ளாது அதற்கு விரோதமாக இருக்கும் சாஸ்திரம், சட்டத்தைக் குறித்து ஒரு வார்த்தை கூடப் பேசாதவர்கள்; அவனியின் போக்குக்கு ஆண்டவர்களும், ஆண்டவர்களின் அருள் பெற்ற ஞானிகளும், ரிஷிகளும் வழிகாட்ட வேண்டுமென்று எண்ணுகிறவர்கள், பேசுகிறவர்கள்; மூடநம்பிக்கையும் மூடப் பழக்க வழக்கங்களும் தொழிலாளிகளிடையே அழியாமல் குலையாமல் அப்படியே

பெரியாரின் அழைப்பு.

வாரீர்! வாரீர்!!

துரிதம்! துரிதம்!!

★

திராவிடத் தாய்மார்களே! தோழர்களே! மாணவ இரத்தினங்களே!

நாளது மேதிங்கள் 8, 9 தேதிகளாகிய சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தூத்துக்குடியில் திராவிடகழக 18வது மாகாண மகாநாடு நடைபெறப்போகிறது.

திராவிட மக்களுக்கு, ஆண்களுக்கும், பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் இப்படிப்பட்ட மகாநாடுகள் மூர்த்தி, தீர்த்த, ஸ்தல, விசேஷங்கள் என்று சொல்லப்படுவதுஆகும். ஆனால் மூர்த்தி, தீர்த்த, விசேஷ ஸ்தலங்கள் புண்ணிய க்ஷேத்திரங்கள் என்பவைகள்போல் நம் மகாநாடுகள் மூடநம்பிக்கையை, அடிமைத்தன்மையை, இழிவைப் பற்றி வெட்கப்படாத மானமற்றதன்மையை வளர்க்கும் பண்ணையல்ல. பயிற்சி அளிக்கும் கலாசாலைக் கல்லூரி அல்ல. தேர்வுப் பட்டம் அளிக்கும் சர்வகலாசாலை அல்ல. மற்றென்னவென்று அறிய அவாக்கொள்வீர்களேயானால் திராவிட கழக மகாநாடுகள் கூட்டங்கள் ஆகியவை மக்களின் மடமை, மானமற்றதன்மை, அடிமை உணர்ச்சி ஆகிய நீண்டநாள் நோயை நீக்கும் வைத்தியசாலையாகும்.

இவ்வைத்தியசாலையில் எக்ஸ்ரே (உள் நுண் நிலைமை அறியும் கருவி) மூலம் வியாதியைக் கண்டுபிடித்து மேஜர் ஆப்ரேஷன் (பலமான ஆயுதப்பிரயோகம் செய்து சத்திர சிகிச்சை) செய்து வியாதிகளை அடியோடு களைந்தெறியும்படியான பணிகள் நடைபெறும். இந்தச் சிகிச்சை பழங்காலமுறைச் சிகிச்சையல்ல. நவீன விஞ்ஞான முறைச் சிகிச்சையாகும்.

ஆகவே மூர்த்தி, தீர்த்த, விசேஷ ஸ்தலங்களைவிட நம் மகாநாடுகள் மேலான அவசியமான பலனைக் கொடுக்கக்கூடியதாகும்.

திராவிட மக்களுக்கு இன்று இருந்து வரும் நோய்க்கு திராவிடக் கழகம், திராவிடக் கழக மகாநாடுகள், கூட்டங்கள் என்கின்றதாய் இன்றைக்கு இந்த ஒரே ஒரு சிகிச்சை ஸ்தாபனம் தான் உண்டு. திராவிட மக்களின் நோயைச் சரியானபடி திராவிடர் கழகம் தான் கண்டுபிடிக்க முடியும். திராவிடர் கழகம் தான் அதற்குச் சரியான சிகிச்சை செய்ய முடியும். இந்து மதம், பார்ப்பனீயம் முதலிய விஷக்கிருமிகள் மக்களைப் பற்றித் தொத்துநோயாகப் பரவாமல் தடுக்க, திராவிடக் கழகத்தால் தான் முடியும். திராவிடக் கழகத்தில் தான் தக்க ஆராய்ச்சிச் சாலைகளும், பரிகாரம் கண்டு பிடிப்புச் சாலைகளும், இவற்றிற்கேற்றபடி அனுபவ ஆராய்ச்சி நிபுணர்களும் இருக்கிறார்கள். திராவிட கழகத்தார் தான் எவ்வித சுயப்பிரதிப் பிரயோஜனமும் இல்லாமல் பரிகாரம் சிகிச்சை செய்கிறார்கள்.

ஆகவே திராவிடமக்கள், திராவிடக்கழக மகாநாட்டுக்கு அவசியம் செல்லவேண்டும். விஷ நோய்களுக்கும், தொத்து நோய்களுக்கும் இடம் கொடுக்கக் கூடாது என்பதோடு வளரும்படியாக, அலட்சியமாகவும் இருக்கக்கூடாது. ஆதலால் உடனே செல்லவேண்டும். அதற்கு ஆகவே தூத்துக்குடி மகாநாடு உங்களை.

வாரீர்! வாரீர்!! துரிதம்! துரிதம்!!

இனிப் பொறுக்கக்கூடாது.

என்று அழைக்கிறது. புறப்படுங்கள்.

இருக்க வேண்டுமென்று விரும்பி அதை நாகரீகம் என்ற போர்வையைப் போர்த்திக் கையாண்டு வருகின்றவர்கள்; சுருக்கமாகத் தொழிலாளி தொழிலாளியாகவே இருக்க வேண்டுமென்று நம்பி அதற்கான வழிகளிலே காரியஞ் செய்யக் கூடியவர்கள் என்று சொல்லக்கூடிய அளவில்தான், இந்தியக் கம்யூனிஸ்டுகளும் இந்திய சோஷியலிஸ்டுகளும் நடைமுறையில் செய்து கொண்டு வருகிறார்கள்.

இந்த மாதிரியான போக்குடையவர்கள் மேதின விரும்பிகள் என்று காட்டிக் கொள்வதினால் உருப்படியான பிரயோஜனம் ஒன்றுமில்லை என்பதை நாம் எடுத்துக் காட்டினாலும் கூட இந்த மேதின அடிப்படையை நாம் வாழ்த்தி வரவேற்கிறோம். மேதினம் என்பதை எண்ணும் போதே அது தலைகீழ்ப் புரட்சி என்பதுதான் நினைவுக்கு வரவேண்டும் என்பதையும் கூறுகிறோம். மே தினம் என்பதைக் கேட்கும்போது, வாழத் தெரிந்த பாட்டாளி வாழ வழி செய்து கொண்ட நாள் என்பது தான் நெஞ்சில் இடம் பெறவேண்டும்; மே தினத்தின் உணர்ச்சி, இழிவுணர்ச்சியையும் தன்னம்பிக்கையில்லாத போக்கையும் சாகடிக்கும் மான உணர்ச்சியாக வளரட்டும்; வளர்ந்து மனிதன் மனிதனாக வாழ்வதற்குத் துணை செய்யட்டும் என்பவைகளையும் நாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.

இந்த மேதின வெற்றியை நம் நாட்டில் அனுபவ ரீதியில் கொண்டாட வழிவகுத்து, அதற்கான காரியத்தில் இடைவிடாதுழைப்பது திராவிட கழகம் ஒன்றுதான் என்பதைத் திராவிடத் தோழர்களான மேதின விரும்பிகள் நிச்சயித்து கொள்ள வேண்டுமென்பது நம் விருப்பம்.

விஞ்ஞான ரீதியில் பகுத்தறிவைத் துணைகொண்டு, பாடுபடும் பாட்டாளிக்கே பாராளும் உரிமையும், பாங்குடன் வாழும் உரிமையும் உண்டு என்பதை வற்புறுத்தும் ஒரு இயக்கம் உண்டு என்றால், அது ஒரேஒரு திராவிட இயக்கந்தான் என்பதை மேதின விரும்பிகளுக்கு நாம் ஞாபகமூட்டுகிறோம்.

வருந்துகிறோம்.

துறையூர் நகர திராவிடர் கழக முன்னாள் செயலாளரும், அண்மையில் வெளிவந்த அழியட்டுமே திராவிடத்தின் ஆசிரியரும், நம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமுமான தோழர் து. வீ. நாராயணன் அவர்கள் 21—4—48ம் நாள் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்துகிறோம்.

இள வயதும், எழுச்சியும் நிறைந்து மக்கட் தொண்டில் பேரார்வம் கொண்டுழைத்த தோழர் நாராயணன் அவர்கள். 19-வயதுள்ள தனது வாழ்க்கைத் துணைவியையும், 2வயதுள்ள தனது மகனையும் பரிதவிக்கச்செய்து இயற்கையின் கொடுமைக்குப் பலியானார் என்பதைக் கேட்க எவரும் திடுக்கிடவே செய்வர்.

ஆறுதல் கூறவோ, ஈடுசெய்யவோ முடியாத இந்தப் பெரும் இழப்பைக் குறித்து நாம் ஆறுதல் எதுவும் கூறினால் அது பொருளற்றதாகும்; அவரின் குடும்பத்தாரோடு நாமும் அவ் வருத்தத்தில் பங்கு கொள்கிறோம்.

ஆசிரியருக்குக் கடிதம்.

ஏப். 22. ஆத்தூர்.

குடிஅரசு ஆசிரியர் அவர்களுக்கு,

தோழரே,

வணக்கம். நமது திராவிடக்கழகம் கடந்த பல ஆண்டுகளாக இந்து மதத்தின், குறிப்பாக தென்னாட்டவரின் ஜாதி மத ஒழிப்புப்பற்றி கட்டுரைகள் தீட்டியும் மேடைகளில் பேசியும் வருகிறது. ஆனால் அந்த புரட்சிமுறை இதுவரை வெகுசிறு அளவுக்குத்தான் நமது சமூகத்தில் நுழைந்திருக்கிறது. நம் தென்னாட்டில், திராவிட நாட்டில் ஜாதி ஒழிப்பு அமுலுக்கு வரவேண்டுமானால், நமது மாபெரும் தலைவர்களின்முயற்சி வீணாகாமலிருக்கவேண்டுமானால், திராவிடக்கழக லட்சியம் விரைவில் வெற்றி பெற வேண்டுமானால், திராவிடக் கழகத்திலிருக்கும் மணமாகாத ஒவ்வொரு வாலிபனும் தான் பிறந்த ஜாதியில் அல்லாது வேறு ஜாதியில் (இப்போதிருக்கும்ஜாதிப்பாகுபாட்டின் படி) தான் ஒரு மணமகளை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், இனி அங்கத்தினர்களாகச் சேரும் தோழர்களும் மண மாகாதிருந்தால் வேறு ஜாதியில் தான் ஒரு பெண்ணை மணக்கவேண்டும் என்ற ஒரு சட்டம் கழகத்தில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்பது எனது தாழ்ந்த விண்ணப்பம். அப்படி மணக்க விருப்பமில்லாதவர்களுக்கு கழகத்தில் இடமில்லை என்று இருந்தால் இந்நாட்டிலேயே ஒரு பெரிய புரட்சியை, எல்லோரும் தோல்வியுற்ற பாதையில் கழகம் வெற்றி அடையும் என்று எண்ணுகிறேன். இதைத் திராவிடத் தலைவர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

ஆ. இரா. பெரியசாமி.

தூத்துக்குடியில் 18வது திராவிடர் கழக மாகாண மாநாடு.

மே, 8, 9ல், நடைபெறும்.

★

ஒரு லட்சம் மக்கள் தங்கும் மாபெரும் பந்தல். பட்டப்பகலென வீசும் மின்சார விளக்குகள். பல தந்திரக் காட்சிகள்.

பெண்களுக்குத் தனி வசதி

இவர்களுக்குப் பெண் தொண்டர். மாநாட்டில் குழந்தைகளுக்குப் படுக்கத் தொட்டில். அமுதால் பால். கூப்பிட்டவுடன் ஓடோடி வரும் தொண்டர்கள். ஏவின வேலையைச் செய்யும் உழைப்பாளிகள். எல்லாம் உண்டு. அனைவரும் வருக.

8-5-48 காலை 8½ மணிக்கு ஊர்வலம்.

தோழர் அருணாசலம் தலைமையில் ஆர்வி மில்லுக்கு முன் உள்ள மைதானத்திலிருந்து புறப்படும்.

கழகக் கொடி தாங்கிய ஒருயானை, அதன் பின்னே 18 குதிரைகள், பாண்டுவாத்தியம், பலஆயிரம் கருஞ்சட்டைத் தொண்டர்கள், அலங்கரிக்கப்பட்ட காரில் பெரியார். அதன் பின் தலைவர்கள், பத்திரிகை ஆசிரியர்கள். வெடி வெடித்துக் கொண்டே இருக்கும். கோஷம் வானத்தைப் பிளந்து கொண்டே இருக்கும். எனவே புறப்படுங்கள் தூத்துக்குடிக்கு.

கே. வி. கே. சாமி.

தூத்துக்குடி மாநாடு.

தகவல் தெரிந்து கொள்ளும் இடம்.

தூத்துக்குடியில் நடைபெறப் போகும் மாகாண மகாநாட்டிற்கு வெளியூர்களிலிருந்து வரும் தோழர்கள் விபரம் அறிந்துகொள்ளும் பொருட்டு 7-5-48லிருந்து தூத்துக்குடி ரயில்வே ஸ்டேஷன் முன்பும், பஸ் ஸ்டாண்ட் முன்பும், தகவல் தெரிந்து கொள்ளும் இடம் ஒவ்வொன்று நிறுவப்பட்டிருக்கிறது. வெளியூர்க்காரர்கள் அனைவரும் அந்த இடத்திலிருக்கும் தொண்டர்களிடம் ஆஜராகி விட்டால் எந்தெந்தப் பகுதிக்காரர்களை எங்கெங்கு தங்க வசதி செய்யப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்கள். "கருஞ்சட்டையுடன் இடது கரத்தில் சிகப்புத் துணியில் தூத்துக்குடி தொண்டர்கள்" என பொறிக்கப்பட்ட சின்னத்தையும் அணிந்திருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கே. வி. கே. சாமி,
செயலாளர்.

பிள்ளை வரம்!

"இயலன்பன்"

அலைகள் அணி வகுத்துச் செல்லும் திருப்பாற்கடலில், லட்சுமி கால் பிடிக்க, ஆயிரம் தலை கொண்ட ஆதிசேடன் மீது, திருமால் ஏதோ ஆழ்ந்து யோசித்த வண்ணம்பள்ளி கொண்டிருந்தார்.

"என்னங்க, என்னமோ யோசனையிலே இருக்கிங்க போலத் தெரியுதே" என்று லட்சுமி தன் பவளச் செவ்வாயைத் திறந்தாள்.

சோகங்கலந்த 'ஆம்' என்ற ஒரு சொல் மட்டும் அவர் திருவாயிலிருந்து வெளிவந்தது, இருளைத் தெளிவாகக் காண்பிக்க வரும் மின்னலைப்போல.

அவர் வாழ்வும் அவ்விருளையே ஒத்து இருக்கின்றதென திருமால் தம் முகக்குறி கூறிற்று.

"என்ன நாதா! என்மீது கோபமோ? கேட்டால் சும்மா இருக்கிறீர்களே!" என்று கூறித் தாமரையைத் தாமரைக்கண்ணன் முகத்தின்மீது வீசினாள் லட்சுமி.

உந்திக் கமலத்திலிருந்து வளர்ந்த தாமரைதான் ஒடிந்து விழுந்து விட்டதோ என்று அஞ்சிய வண்ணம், தன் கண்களைத் திறந்துமேல் நோக்கினார் அனைத்தும் அறிந்த அண்ணல். பயந் தெளிந்தார் பிரம்மாவைக் கண்டவுடன்; பின் விழிகளை லட்சுமி மீது வீசினார்.

ல: "ஏது! ஆராய்ச்சி பலமாக இருக்கிறதே."

தி: 'ஒன்றுமில்லே! நமது பக்தன் நம்மை ஒரு வரம் கேட்டான். அது.........'

ல: ஆராய்ச்சியில் இறக்கி விட்டதாக்கும், அப்பேர்ப்பட்ட வரம் என்னவோ?

தி: பேசாமல் இருக்கிறார்.

ல: 'இதோ பாருங்கள்! சொல்லாவிட்டால் இனி மேல்......'

தி: 'கோபப்படுகிறாயே! அந்தப் பக்தனுக்கு மணம் ஆகி ஏழு எட்டு ஆண்டுகள் ஆகியும், ஒரு குழந்தை கூடப் பிறக்கவில்லையாம். ஆதலின் 'குழந்தை வரம்' கேட்கிறான்.'

ல: 'குழந்தை வரம் தானே! கொடுத்தீரல்லவோ?'

தி: 'என்ன லட்சுமி! கொஞ்சம் கூட விவரம் தெரியாமல் பேசுகிறாய்?'

ல: (ஆத்திரத்துடன்) 'நான் விவரம் தெரியாமல் பேசுகிறேனா?'

தி: 'கோபம் கொள்ளேல் மாதே! நான் கூறுவதைக் கவனி! நம்மிருவருக்கும் மணம் ஆகி எவவளவு ஆண்டுகள் ஆகின்றன. (யுகங்கள்) ஒரு குழந்தையாவது இருக்கிறதா? நமக்கே இது ஓர் பெருங்குறையாயிருக்கும் பொழுது, மற்றையோர்க்குப் பிள்ளை வரம் அளிப்பது என்னால் எவ்வாறு முடியும்? உன்னால் தான் முடியக்கூடிய காரியமா?

ல: 'தங்களாலேயே முடியாவிட்டால் என்னால் மட்டும் எப்படி...'

பூலோகம்

பக்தன் இப்பொழுது பிள்ளை வரத்திற்குப் பிரதட்சணம் செய்கிறார் திருப்பதியில்.

பிர்மலோகம்.

மேலே நடைபெற்ற உரையாடலைக் கேட்ட வண்ணம் பிரம்மா, சரசு! என்கிறார்.

சரஸ்வதி: 'ஏன் நாதா?'

பி: 'திருமாலும் லட்சுமியும் பேசியதைக் கவனித்தாயா?'

ச: (சோகக்குரலில்) 'கவனித்தேன். நமக்குந்தான்.........'

பி: 'என்ன செய்வது?'

ச: 'எனக்கு ஒரு யோசனை?' தோன்றுகிறது.

பி: [ஆவலுடன்] என்ன யோசனை?

ச: 'அர்த்தநாரீஸ்வரர் வாழ்கிற திருச்செங்கோட்டு மலையிலுள்ள வரடிக்கல்லை (மலடிக்கல்) வலம் வருவது நல்லது என.........'

பி: 'ஆகா! மிக அருமையான யோசனை. ரொம்ப தாங்க்ஸ்'

பிரம்மா, இந்த அபாரயோசனையைத் திருமாலுக்குக்கூற, லட்சுமி சரஸ்வதி வண்ணம் இவர்கள் நால்வரும் மலைக்குப் புறப்பட்டனர்.

பிள்ளையார் தன் வாகனமாகிய பெருச்சாளியின் மீது ஏறிக்கொண்டு மலையின் காட்சிகளைக் காண 'வாக்கிங்' சென்றிருந்தார். சுப்பிரமணியன் தன் பாரியாள் வள்ளியுடன் குற்றாலம்சென்றிருந்தார் கோடை காலத்தைக் கழிக்க. (மயிலோடுகூடத்தான்; ரயிலிலே கூட்டம் ஏராளம் பாருங்கள்.)

அன்று, எறும்பைப் பேழையில் அடைத்துத் தன் கணவனைச் சோதித்த பார்வதி, மாலை தொடுத்துக்கொண்டு நாயகன் வரவை எதிர்நோக்கியிருந்தாள். சிறிது நேரத்திற்குள் படி அளக்கச் சென்ற பரமசிவன் வேலையின் மிகுதியால் சோர்வுடன் இல்லம் வந்தார். பார்வதி தான் தொடுத்த மாலையைச் சூட்டி வரவேற்றாள். பின் பரமன் பார்வதியைப்பார்த்து, 'ஏது! இன்று மாலை கிலை எல்லாம் பலமாயிருக்கு பார்வதி' என்றார்.

பா: மௌனம் சாதிக்கிறாள்.

சி: 'என்னுடன் பேசமாட்டாயா? என்ன! மனக்கலக்கம் கொண்டவள் போல் தோன்றுகிறாயே காரணம் என்ன?'

பா: 'பிள்ளை இல்லாப் பெருங் குறைதான். வேறென்ன?

சி: அட! பிள்ளையா! யாருக்கு?

பா: 'ஒன்றும் தெரியாதவர் போலப் பேசுகிறீர்களே! நம் மைந்தன் சுப்பிரமணியனுக்குக் கலியாணம் ஆகி எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டது. அவனுக்கு ஒரு குழந்தை இருந்தால் இவன் தரன் நம் பேரன் எனமகிழ்வுடன் இருப்போம்' (பெருமூச்சு)

சி: (மௌனம் பின்) என்ன பார்வதி! படைக்கும் தொழில் என்னிடமா இருக்கிறது? என்னிடம் இருந்தால் இத்தனை நேரம் ....பிரம்மா அல்லவா இதற்கு உரியவர். அவரைப்பார்த்து முறையிட்டால் அல்லவா பரிகாரம் கிடைக்கும்.

பா: அவரைத் தான் போய்ப் பார்ப்போம். அங்கு போவோம் வாங்......க......ளேன்.

சி: நந்தி! பிரமலோகம் போகத் தயாராயிரு.

திருமாலும் லட்சுமியும், பிரம்மாவும் சரஸ்வதியும் பிள்ளைவரத்திற்குத் திருச்செங்கோடுசெல்கின்கின்றனர். அம்மலைவாழ் ஈசனும் பார்வதியும் தன் மைந்தனுக்குப் பிள்ளை வரம் பெறப்பிரமலோகம் செல்கின்றனர். பக்தன் இதையடைய திருப்பதியில் பிரதட்சணம் செய்கிறான். வெற்றி கிடைக்குமா என்பதை நீங்களே சிந்தியுங்கள்.

ஒழிக ஆரிய புரட்டு!

சொள்ளை மனிதரின்
நொள்ளைப் பேச்சு
பிள்ளை வரம்.

தூத்துக்குடி மாநாட்டுக்கு இரண்டு தீர்மானங்கள்.

ஈரோடு. எப் 29

28—4—48 தேதி நகர திராவிடர் கழகக் கமிட்டித் தலைவரும், முனிசிபல் கவுன்சிலருமான தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில் நகர திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி மாநாட்டுக்கு 7 பிரதிநிதிகளைக் கமிட்டி தேர்ந்தெடுத்த பின்னர், கீழ்க்கண்ட இரண்டுதீர்மானங்களைத் தூத்துக்குடி மாநாட்டுக்கு அனுப்புவதென ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. பெரியார் அவர்கள் பொறுப்பில் நடைபெற்றுவரும் பத்திரிக்கைகள், பதிப்பகங்கள் கையாண்டு வரும் எழுத்துச் சீர்திருத்த முறையைத் திராவிட இயக்கப் பத்திரிக்கைகள், பதிப்பகங்கள் அனைத்தும் அனுசரிக்க வேண்டும் என இம் மாநாடு தீர்மானிக்கிறது.

2. திராவிடர் கழகக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளுகிற ஆண், பெண் இருபாலோரும் எவ்விதக்கட்டணமுமில்லாமலே அங்கத்தினர்களாகச்சேருவதற்கான முறையில் விதியை மாற்றியமைக்க இம் மாநாடு ஒப்புக்கொள்ளுகிறது.

ஏஜண்டுகள் தேவை.

கீழ்க்கண்ட இடங்களுக்குநமது "குடிஅரசு" விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.

கும்பகோணம்
ஆர்க்காடு
விருது நகர்
சேர்மாதேவி
ஆலங்குலம்
அறந்தாங்கி
திருவள்ளூர்
தேவகோட்டை.

மானேஜர், "குடிஅரசு"

22—5—48ம் நாள் பௌரணமியில் கைலாஸ் ஹில்ஸ் ஹெர்ப் (ரிஜிஸ்ட்) ஒரு டோஸ் உட்கொண்டால் 5-வகையான ஆஸ்த்துமாவும் சுகமாகும்.

ஆங்கிலம் அல்லது இந்தியில் எழுதுக:

BRAHMACHARI G. DAS
Sri Sidh Brahmacharya
Sewa Ashram,
P. C. Chitrakot, U. P.

புதிய பதிப்பு! வெளிவந்து விட்டது!!

பணம் பிடுங்கிப் பார்ப்பனர்.

(ஆசிரியர்:— தோழர் திரவியம்)
சித்திரபுத்திரன் கட்டுரைகள் சில சேர்க்கப்பட்டிருக்கின்றன.
விலை ரூ. 0-14-0.
தூத்துக்குடி மாநாட்டில் விலை ரூ 0-12-0.

புதிய வெளியீடு.

இதோ! பெரியாரில் பெரியார்.

(தோழர் K. V. அழகிரிசாமி சொற்பொழிவு)
விலை அணா ஆறு.
தூத்துக்குடி மாநாட்டில் விலை 5 அணா.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சில்லரை விஷயங்களுக்குச் சிந்தனையைச் செலவிடுகிறோம். ஆனால்......

ஆனால் எந்த மனிதனும் ஒரு அளவுக்காவது பகுத்தறிவை உபயோகித்துத்தான் வாழ்கிறான். நகை வாங்கும்போது அதை உரைத்துப் பார்க்காமலோ அக்கம் பக்கம் விசாரிக்காமலோயாரும் வாங்கிவிடுவதில்லை. அப்படிப் பார்ப்பதும் பகுத்தறிவுதான். ஒரு சேலை வாங்கினாலும்கூட சாயம் நிற்குமா, அதன் விலைசரியா, இதற்குமுன் இவர்கடையில் வாங்கிய சேலை சரியாக உழைத்திருக்கிறதா, இக்கடைக்காரர் ஒழுங்கானவர்தானா என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்துத்தான் வாங்குகிறோம். இப்படிப்பட்ட சில்லரைக் காரியங்களுக்கெல்லாம் பகுத்தறிவை உபயோகிக்கும் நாம் சில முக்கியமான விஷயங்களில் மட்டும் பகுத்தறிவை உபயோகிக்கத்தவறிவிடுகிறோம். அதனால் ரொம்பவும் ஏமாந்தும் போகிறோம். இதை உணர்த்துவதுதான், பகுத்தறிவின் அவசியத்தை வற்புறுத்துவதுதான் எனது முதலாவது கடமை.

ஒரு ரேடியோவாக என்னைக் கருதுங்களேன்.

என் கருத்தைச் சொல்ல எனக்கு உரிமை உண்டு. சுதந்தரம் உண்டு. என்ற நம்பிக்கையின் பேரில் நான் என் பகுத்தறிவுக்குப்பட்டதை என்னால் கூடுமான அளவுக்கு விளக்கிச் சொல்லுகிறேன். நீங்களும் ஏதோ ஒரு ரேடியோ பேசுவதாகக் கொண்டு சற்று அமைதியாகவும், கவனத்தோடும் கேளுங்கள். உங்களுக்கு விருப்பமற்ற செய்திகளை ரேடியோ அறிவிக்கிறது என்பதற்காக அதை உடைத்தெறிந்து விடுவீர்களா? அல்லது அதன் மீது உங்களால் கோபித்துக் கொள்ளத்தான் முடியுமா? ஆகவே நான் கூறுவது உங்களுக்குப் பிடிக்காவிட்டாலும் கொஞ்சம் கவனமாகக் கேட்டு பின்பு ஆராய்ந்து பார்க்க வேண்டுகிறேன். நான் பொறுப்பற்றும் பேசுவதில்லை. திராவிடக் கழகத் தலைவன் என்கிற முறையில்தான் எனக்குள்ள சகல பொறுப்புகளையும் உணர்ந்துதான் பேசுகிறேன். நான் கூறுவதில் சந்தேகம் ஏற்படுமானாலும் அதை விளக்கிக் கூறவும் நான் தயாராகவே இருக்கிறேன்.

மன்னிக்க வேண்டுகிறோம்.

தூத்துக்குடி மாநாட்டுக்கு புக்ஸ்டால் கொண்டு போவதற்கான ஏற்பாட்டில் இருந்து வருவதால் மே மாதம் 10 தேதி வரையிலும் புத்தகங்களை வி. பி. யில் அனுப்ப இயலாமைக்கு மன்னிக்க வேண்டுகிறோம்.

ஏற்கனவே ஆர்டர் அனுப்பியவர்களும் தயவு செய்து மே மாதம் 10 தேதிக்கு மேல் தபால் எழுத வேண்டுகிறோம்.

மானேஜர்
நாதன் கம்பெனி
புக் ஸ்டால், ஈரோடு.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

றது. ருஷியா சில ஆண்டுக்குப் பிறகு சுயராஜ்யம் பெற்றது. ஆனால் சீனா சீர் குலைந்து சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறது. ருஷியா க்ஷேமமாய் வாழ்ந்து வல்லரசாகக் காட்சியளிக்கிறது. ஏன்? சீன நாட்டு ஆட்சி, சிறு கூட்டத்தினரான சுயநலக்காரரின் க்ஷேமத்துக்காக நடைபெறுகிறது. பொதுமக்களின் நன்மை கவனிக்கப்படவில்லை. ருஷிய நாட்டு ஆட்சியோ பொதுஜனங்களின் க்ஷேமத்துக்காகவே நடைபெறுகிறது. ஆகவே முன்னேற்றமடைந்திருக்கிறது.

நமது கண் முன் காணப்படும் இந்தத் தேசச் சரித்திரப் பாடங்களை நாம் நன்கு உணரவேண்டும். இந்தியா இப்போது சுயராஜ்யம் பெற்றிருக்கிறது. ஆனால், வந்த சுயராஜ்யம் இன்னும் நிலைப்பட்டு அமரவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை, வழக்கம்போல, எல்லாத் தேசங்களிலும் நடக்கிறபடி, சந்தர்ப்பவாதிகளும், முதலாளிக் கூட்டமும், சுயநலக் கும்பல்களும், மதத்தின் பேரால் உழைக்காமல் வாழும் சோம்பேறிக் கூட்டமும் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்கிறார்கள். சதிகாரக் கும்பல், இந்தியாவுக்குக் கிடைத்த சுயராஜ்யத்தை, பொது மக்கள் கையில் இருக்கவேண்டிய அதிகாரத்தை, சுயநல ராஜ்யமாகச் செய்து கொள்ளப் பலமாகப் பிரயத்தனம் செய்கிறது. இதன் விளைவு தான் காந்தியாரின் கொலை. காந்தியாரின் கொலைக்குக் காரணமாக இருந்தவர்கள் இன்னும் தண்டிக்கப்படவில்லை. உறுதியான, பலமான ஆட்சி இப்போது அரசுபீடத்தில் இருந்து சுயராஜ்யத்தைப் பொதுமக்கள் க்ஷேமத்துக்காக அமைக்கவேண்டும். சுயநலவாதிகளின், சந்தர்ப்ப வாதிகளின் கையாட்களாக இருந்து கொண்டு சுயராஜ்யத்தைக் சுயநல ராஜ்ஜியமாக்கக் கூடாது. நாட்டைப் பாழ்படுத்தக்கூடாது. ஹிட்லர்களாகவும் முசோலினிகளாகவும் இருந்து நாட்டுக்கும் மக்களுக்கும் கேடுசூழக்கூடாது.

காந்தியார் போன்ற உத்தமர்களின் உயிருக்கே உலை வைக்கும் கொடியவர்களின் இயக்கம், நாட்டில் பரவியிருக்கிறது. இக்கொடியவர்களின் கையில் அரசாட்சியும் அதிகாரமும் சிக்கிவிடுமானால் இந்திய தேசத்தின் கதி அதோகதி தான்.

சுயராஜ்யம் பெற்றால் மட்டும் போதாது. அதைநல்ல முறையில் ஆட்சி செய்யத்திறமையும், அறிவும், ஆற்றலும், நல்லெண்ணமும் வேண்டும். இது ஆபத்தான நேரம், சுயராஜ்யம் வந்தது வராததற்குள்ளாகவே, இப்போதைய ஆட்சி சுயநல ஆட்சி, முதலாளிகளின் ஆட்சி என்று வதந்தி உலவுகிறது. தேசத்தொண்டர்களின் தியாகங்களும் உழைப்பும் வீணாய்விட்டன என்றும், பொதுஜனங்களின் நன்மை கவனிக்கப்படவில்லை என்றும் எங்கும் பேசப்படுகிறது. லஞ்சமும் கைக்கூலியும் உத்தியோகஸ்தர்களிடம் தாண்டவம் ஆடுகின்றன என்று அரசாங்க அதிகாரிகளே பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறார்கள்.

இந்திய சுயராஜ்யம் சீனாவைப் போலச்சீர்கெட்டுசிறுமையடையப் போகிறதா? அல்லது, துருக்கி, ருஷியா தேசங்களைப் போல சிறப்புற்றுச் செம்மையடையப் போகிறதா? வந்த சுயராஜ்யம் எங்கேபோய் யார்கையில் சிக்கிக் கொண்டு நாட்டை எந்நிலையில் விடுமோ தெரியவில்லை. தேசத் தொண்டர்கள் தியாகம் செய்ததும் சிறைச்சாலைக்குச் சென்றதும் போதும் என்று சும்மா இருக்கக் கூடாது. இனிமேல் தான் அவர்கள் விழிப்பாக இருந்து நாட்டில் நல்ல ஆட்சி, பொதுஜன க்ஷேமத்துக்கான ஆட்சி நிலைக்கும்படி வேலைசெய்யவேண்டும். பொதுஜனங்கள் இவ்விஷயத்தில் கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும்.

பிறநாட்டில் திராவிடத் தோழர்கள்.

செய்திச் சுருக்கம்.

பம்பாய் (தாராவி)

10—4—48 ல் தாராவி ரஜபலிசால் 1ம் நெ. அவ்வையார் விலாசத்திலிருந்து தாய்நாடு செல்லும் தோழர்களான அப்பாவு, சண்முகம் ஆகிய இருவர்களுக்கும் திராவிட நாடு பகுத்தறிவு நிலையத் தலைவர் திரு எஸ். பெரியசுவாமியவர்கள் தலைமையின் கீழ் ஷை இல்லத் தோழர்களால் ஓர் தேனீர் விருந்தளிக்கப்பட்டது.

தோழர் எஸ். பி. ஆத்திமுத்து அவர்களால் மதுவிலக்குப் பாடல் விருந்தளிக்கப்பட்ட பின் தோழர்களாகிய இசக்கிமுத்து, எஸ். சுப்பையா இவாகளால் இருதோழர்களின் நற்பணிகளைக் குறித்து சொற்பொழிவாற்றிய பின் திரு அப்பாவு அவர்களுக்கு இல்லத்தின் சார்பாக திரு ஆத்திமுத்து அவர்களால் பல சன்மானமளிக்கப்பட்டதுடன் தோழர் எம். ஆர். ஆறுமுகம் அவர்களாலும் மலர்மாலை சூட்டப்பட்டபின் தோழர் ஆ. தங்கையா அவர்களால் தோழர் சண்முகம் அவர்களுக்கு முகமன்கூறி சன்மானமும் ஆரமும் அளிக்கப்பட்டது. இதன் நினைவாக "விடுதலை" க்கும் குடி அரசுக்கும் தலா ஒரு ரூ. வீதம் அன்பளிப்பு அளிக்கப்பட்டது.

★

தோழர்களே!

பல தோழர்களின் விருப்பத்திற்கு இணங்க இனிமேற்கொண்டு கீழ் கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

1. நமது இயக்க மாநாடுகள், விழாக்கள், பொதுக் கூட்டங்கள், திருமணங்கள் முதலியவைகள் நடைபெறுவதற்கு முன்னதாக நமக்குச் செய்திகள் அனுப்பி வைத்தால்

நடக்க இருப்பவை.

என்ற தலைப்பில் பிரசுரிக்கப்படும்.

2. சிங்கப்பூர், மலேயா, சிலோன், பம்பாய் போன்ற பிறநாடுகளில் வாழும் திராவிடத் தோழர்களின் செய்திகளை நம் நாட்டு மக்களும் அறிய வேண்டியிருப்பதால் அவைகளைச் சுருக்கமாகவாவது பிரசுரிக்கப்படும்.

தூத்துக்குடி மாநாட்டில்

உங்களுக்கு விருப்பமான முறையில் கார்டு, கவர், லெட்டர் பேப்பர், காலண்டர் முதலானவைகளுக்கு நேரில்விபரமாக ஆர்டர்கொடுங்கள்.
தமிழன் பிரஸ், ஈரோடு.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

பிராமணனே என்குலதெய்வம் என்கிற பகவத்கீதை அவருக்குச் சிறந்த நூல். சடாயு என்கிற பட்சிக்குத் தன் தம்பியைக் கொண்டும், சுக்கிரீபனைக் கொண்டு வாலிக்கும், கருமாந்திரம் நடத்திய இராமராச்சியம் அவர் சொற்பனம். இராஜசிம்மாசனத்திலும், சமயகுருபீடத்திலும் அதிகாரங்களைத் தாங்கி நிற்பவர்கள் பார்ப்பார்கள் தானே. அப்படியிருக்க மகாத்மாவிற்குச் சிராத்தமும், அஸ்திகரைப்பும் நடவாமல் எப்படியிருக்க முடியும்? பெரியவர்களின் அஸ்தி கண்டவிடத்தில் மிதிபடுவதைவிட மண்ணோடு மண்ணாகிப்போக அஸ்திகரைப்பதில் விசேடமொன்றுமில்லை. என்று இராஜகோபாலச்சாரி சொன்னது போல, மகாத்மாகாந்தி இதையெல்லாம் பார்த்திருந்தால் வேறு எதாவது சொல்லியிருப்பார். ஏழைகள் பக்கமாயிருக்கும் ஆறுகுளத்தில் கரைப்பார்கள். பணக்காராகள் காசியில் கரைப்பார்கள். மகாத்மா பெரும் பெரியவரானபடியால் எல்லா இடத்திலும் கரைக்கப்பட்டது. பாத்தியதையும் பெருமையடைய வேண்டியும் கரைத்தார்கள். அதில் ஆச்சரியமொன்றுமில்லை.

நேரு அவர்கள் புதுக்கப்பலைச் சமுத்திரத்தில் விட்டு, வெள்ளோட்டம் தென்தேசத்தில் பார்த்தார். கப்பலுக்கு ஓமம், ஜெபம், பூசை, புரோகிதச் சடங்குகளெல்லாம் செய்தார்கள். புரோகிதப் படத்துடன் பத்திரிகைகளில் வந்தது. மற்ற நாடுகளில் எத்தனையோ ஆயிரமாயிரம் கப்பல் கட்டி நீரில் மிதக்கவிடுகிறார்கள்-அந்தக் கப்பல்களெல்லாம் ஜெப, தப, ஓமத்தில் பார்ப்பானின் மந்திரத்துடனா சமுத்திரம் பார்க்கிறது? இந்து மதத்தின் அறியாமையும், பார்ப்பாரின் ஆதிக்கமுமிருக்கும் வரையிலும் இவைகளெல்லாமிருந்துதான் தீரும்.

நமது டாக்டர் சுப்பராயன் படித்தவர், பாரிஸ்டர், விவகாரம் தெரிந்தவர், உண்மைகளைக் கண்டு பிடிக்கும் போலீஸ் மந்திரி. அளகப்ப செட்டியாரோ படித்தவர், பணக்காரர், தருமம் கொடுப்பவர். செத்துப் போன மகாத்மா காந்தியைப் பழைப்பிக்க ஒரு சாமியாரை டில்லிக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள். டில்லியிலிருந்த பிரமுகர்களும் மகாத்மாவைக் காட்டினார்கள். சாமியார் பரிசோதித்துக் கழுத்தில் ஒரு துவாரம் போட்டு மருந்தை உள்ளுக்குள் செலுத்தவேண்டுமென்றார். அதற்குப் பின் சாமியாரைப் போகச்சொன்னார்கள். அந்தப் பெரியவர்களெல்லாம் செத்துப் போன மகாத்மாவைப் பிழைப்பிக்க அத்தனை பாடுபட்டிருக்கிறார்களே. நாங்களேன் செத்துப் போனவர்களைப் பிழைப்பிக்கச் சாமியார்களைக் கூட்டிக்கொண்டு போகப்படாது என்று என்னைக் கேட்காதீர்கள். பகுத்தறிவிற்கு ஒத்துவராததை விட்டுவிட வேண்டுமென்பதே நம் சங்கக்கொள்கை. மகாத்மா காந்தி நம் ஜாதிக்கும் சமயத்திற்கும் முக்கியமான சில விஷயங்கள் சொன்னார். அவர் அஸ்தியைக் கரைத்தது போல, அதையும் பார்ப்பார்களும் பணக்காரர்களும் கரைத்து விடுவார்கள். அவைகள் எப்படியோ இருக்கட்டும். நம் பெரியார் சொல்லுவது போலப் பொறுமையும், சாந்தமும் நமக்கெல்லாம் வந்து, கருப்புச் சட்டையும் போட்டுக் கொள்வோம். போட்டுக் கொண்டால் ஹிரண்ய கர்ப்பராலுண்டாக்கப்பட்ட மனுப் பிரஜாபதியினிடம் தோன்றிய மரீசி, அவரிடம் பிறந்த பலவித பிதிரர் முதலியவர்கள், கருப்பைக் கண்டு மிரண்டு பூலோகத்திற்கு வரமாட்டார்கள். பூலோக சம்பந்தம் வைத்துக் கொள்ளவும் மாட்டார்கள். எந்த ஜெந்துவும் கருப்பைக் கண்டால் மிரண்டு ஓடிவிடும்.

வாலிபர்களே! சிரார்த்தத்தைப்பற்றிய பல சந்தேகங்கள் உங்களுக்குத் தோன்றும். அந்தச் சந்தேகங்களும், அதற்குச் சமாதானமும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் சங்கைக்குச் சமாதானம் சரியாகவிருக்காது. இறந்தவர்களையுத்தேசித்துச் சிரார்த்தம் செய்வது உசிதமாகக் காணப்படவில்லை. இறந்துபோன முன்னோர் நரகம் முதலிய லோகாந்தரத்தை அடையாமல் ஒருக்கால் முத்தியடைந்தனரோ? அல்லது பிர்மாதிலோகம் சென்றிருக்கின்றனரோ? அல்லது சுவர்க்கம் சென்றிருக்கின்றனரோ? அல்லது எவ்வுலகத்திற்கும் செல்லாமல் இவ்வுலகிலேயே பிறந்திருக்கின்றனரோ? அல்லது நாய், நரி, பன்றி முதலியவைகளாய்ப் பிறந்திருக்கின்றனரோ? எக்கதி யடைந்திருக்கின்றனரென்பது நமக்குத் தெரியவில்லை. ஆதலால் இவ்விதமாயினர் என்று சொல்ல நம்மால் இயலாது. இதற்கு இயலாவிடின் அவர் எங்கிருக்கின்றனர் என நன்கு அறிந்து செய்யவேண்டிய சிரார்த்தம் எங்ஙனம்பிரயோஜனப்படும்? நரகத்திலாவது வேறு ஜென்மத்தை எடுத்தாவது இருந்தார்களாயின், பரதந்தரத்துடன் கூடிய அவர் சிரார்த்தத்திற்கு வந்து புசித்துப் போதல் எப்படி ஒவ்வும்? அன்றியும் தேவர்களைக் குறித்து இங்குஅக்கினியில் ஓமம் செய்வது, சுவர்க்கத்திலுள்ள தேவருக்கு எங்ஙனம் சேரும் என்கிற சங்கைகளும் சமாதானங்களும் சாஸ்திரங்களிலிருக்கின்றன. பிர்மா மனுவையுண்டாக்கினார். மனு உண்டாக்கிய மரீஷியால், உண்டாக்கப்பட்ட பலவகைப் பிதிரர்கள். இவர்களெல்லாம் எங்கிருந்து உண்டானார்கள்? எப்படி உண்டாக்கப்பட்டார்கள்? எல்லோரும் பிராமணர்களாயிற்றே! முகத்திலிருந்தா, பிரஜா பதியிருந்தா உண்டாக்கப்பட்டார்கள் என்கிற சங்கைகளும் உதிக்கும். எல்லாச் சிருஷ்டியும் செய்கிறவர் பிர்மாவானதால், எந்த விதமான சிருஷ்டியும் செய்வார் என்பது தான் பதில். பரந்த உலகத்தில் ஒரு சிறு இடத்தில் மட்டும் இந்தச் சிருஷ்டியை என் செய்தார்? அதுவும் அவரிஷ்டம் என்பார்கள். அதற்குமேல் கேட்டால் நாத்தீகன் என்பார்கள். சாஸ்திரங்களிலும் அப்படித்தான் எழுதியிருக்கிறது. அவைகளுக்காகத் தான் பிராமணன் தவிர, மற்றவர்கள் தத்துவ சாஸ்திரமும் படிக்கக் கூடாது. என்று தடை போட்டார்கள். பஞ்சமர்களையும் இந்துக்கள் தான் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கும் அனுலோம, பிரதிலோம கூட்டத்திற்கும் மரீசி பிதிரர்களை உண்டாக்கவில்லை. ஒரு சிறு கூட்ட இந்துக்களுக்குத் தவிர மற்றக் கூட்டங்களுக்கும் பிர்மா பிதிரர்களை உண்டாக்கவில்லை. நமக்கு இப்பொழுதுள்ள விரோதிகள் தேவர்கள், மனிதர்களல்ல. தேவகூட்ட விரோதிகளைத் தள்ளிவிட்டால், மனித விரோதமெல்லாம் நீங்கிவிடும். தேவகூட்ட சிநேகிதம் நமக்கு எப்பொழுது மிருக்கவே, இராமாயணத்தையும் பாரதத்தையும் காட்டிக் கொண்டேயிருக்கிறார்கள். நம் மாகாணத்தை விட்டு வேறு மாகாணத்திற்கு கவர்னராகப் போய்விட்ட இராஜகோபாலச்சாரியார் நம்மாகாணப்பள்ளிக்குப் பாடமாக இராமாயண பாரதத்தை வைக்கும் படியாகச் சொல்லுகிறார். உண்மை தெரிவதற்கு இது ஒன்றே போதும். தேசிய பத்திரிகைகள் அவைகளுக்கு உரைஎழுதிக் கொண்டு வருவதையும் கவனியுங்கள். ஆகக்கூடித் தேவர்கள் உறவை நாம் விட்டுவிடவேண்டும்.

இராஜகோபாலாச்சாரி, சி. பி. அய்யர், ஓமந்தூரார், பிர்மசமாஜ்ஜிய டாக்டர் சுப்பராயன் இவர்களுக்கெல்லாம் இறந்தபின் திவசம் செய்யாமலா இருப்பார்கள்? இவர்களெல்லாம் தேவர்களுடைய பிள்ளைகளல்லவா? அந்தவிஷயத்தில் மனிதர்களின் பிள்ளைகளான நமக்கேன் விசாரம்? போட்டி? கருப்பு அழகில் தள்ளுபடி. கண்ணும் மயிறும் கருப்பா இல்லாவிட்டால் அழகில்லை. தங்கம் வெள்ளி உயர்ந்தது. இரும்பு கருப்பு. இரும்பில்லாவிட்டால் உலகம் நடக்காது. மேகம் கருப்பு, சமுத்திரம் கருப்பு, இரண்டுமில்லாவிட்டால் ஒன்று மேயில்லை. உலகமெல்லாம் வியாபித்திருக்கும் சக்தியை விஷ்ணுவென்கிறார்கள். அந்த விஷ்ணுவையும் கருப்பென்றே சொல்லுகிறார்கள். நமது பெரியார் ஞானியல்ல, தீர்க்கதரிசியல்ல, ரிஷியுமல்ல, கருப்பில்தான் நம்முலகமிருக்கிறதென்பதை எப்படித் தெரிந்தாரோ, அந்தப்புத்திக்கு மரியாதைசெய்வோம், அவ்வழியே நடப்போம்,

நாட்டின் நலிவும் ஏட்டில் வலிவும்

"மு. ராஜமாணிக்கம்"

அறிவியலின் ஆராய்ச்சி மனிதன் எதிர்பாராத அளவுக்கு வளர்ந்துள்ள காலம் இது. அணுச் சக்தியை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உபயோகிக்கப்படுகிறது. சந்திரனில் மக்கள் குடிபோக முடியுமா? என்ற ஆராய்ச்சித் துறையில் விஞ்ஞானிகள் மிக வேகமாக முனைந்துள்ளனர். கானல் நீர் ஓடும் பாலைவனத்தைக் கழனியாக்க வழி கண்டு பிடிக்கப்படுகிறது. அய்நூறு பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு முந்நூறு மைல் வேகத்தில் பறக்கக்கூடியதும், வேண்டுமென்ற இடத்தில் ஆகாயத்திலேயே நிறுத்தக்கூடியதுமான பறக்கும் ரயில்கள் பறக்கின்றன. நூதன ரசாயன எருவை உற்பத்தி செய்து விளை நிலங்களில் தூவி விளை பொருள்களைப் பல மடங்கு அதிகமாக்கப்படுகிறது. இன்னும் பல பல நடக்கின்றன மேனாடுகளிலே; நம் நாட்டில் அல்ல.

அறிவியல் ஆராய்ச்சியின் பயனாகப் போர்க் கருவிகளை உற்பத்தி செய்து அமைதியின்றி, போரிலே ஒவ்வொரு நாடுகளும் ஈடுபட்டு, மக்களை மாய்க்கும்படி செய்கிறது. ஆதலால் அந்த அறிவியல் ஆராய்ச்சி மக்களுக்குக்கேடு பயக்கிறது என்ற ஒரு எண்ணந்தான் நம்மக்களின் மனதில் புகுத்தப்பட்டிருக்கிறது. மற்றைய நாடுகளில் அறிவியலை மக்களின் நலனுக்காக உபயோகப்படுத்தி, அதன் பெருமைகளைப் பற்றிப் பேசுவதில் பெருமையடைகின்றனர், அந்நாடுகளின் மக்கள். அந்தத் துறையில் ஒவ்வொரு நாடுகளும் போட்டி போட்டுக்கொண்டு முன்னேறுகின்றன. நம் நாட்டிலோ அறிவியல் ஆராய்ச்சியில் என்ன கெடுதல்கள் ஏற்படக்கூடும் என்ற ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர். அது மட்டுமட்டிலுமல்ல. அதுபற்றி பெருமையுமடைகின்றனர். அதற்குள்ள ஆதரவோ ஏராளம். நாட்டிலுள்ள பிரபல பத்திரிகைகளெல்லாம் அதை ஆதரிப்பதிலே ஒரு தனிப்பெருமையடைகின்றன. இது போன்ற அறிவுக்குப் பொருத்தமற்ற காரியங்கள் நம் நாட்டிலே தான் நடக்கின்றதே யன்றி உலகத்தில் மற்றெந்த நாட்டிலும் காணமுடியாது.

மக்களுக்கு அறிவுவளரவேண்டும். அதன் பயனாக மக்களின் வாழ்வு வளம்பெற வேண்டும், அதற்காக எந்த முறையையும் கையாளுவதில் தவறு ஒன்றுமில்லை என்று மற்றைய நாடுகளில் போதிக்கப்படுகிறது. ஆனால் நம் நாட்டிலோ மக்களுக்கு அறிவு பரவி விட்டால் ஆளும் வர்க்கத்தினருக்கு அனர்த்தம் வந்துவிடுமெனப் பயந்து அதைக் கட்டுப்படுத்தும் முறையில், அரசாங்கத்தின் போக்கும் அதை ஆதரிக்கும் பத்திரிகைகளின் போக்கும் திரும்பியுள்ளது. இயற்கையின் வனப்பையும், விஞ்ஞான சாதனத்தையும் கொண்டு எந்த முறையில் முன்னேறக்கூடும் என்றும், அதற்கான வேலையில் அல்லும் பகலும் எந்நேரமும் அறிஞர் தங்கள் அறிவை உபயோகித்துக்கொண்டிருக்கின்றனர். அதற்கான உழைப்பையும் பொருள் செலவையும் அளவின்றி செலவளிக்கின்றனர், மேனாடுகளிலே. ஆனால் நம் நாட்டில் அவர்கள் பல ஆண்டுகள் உழைத்தஉழைப்பால் கண்டு பிடித்தபொருள்களை உபயோகித்துக் கொண்டு, அதில் என்ன குற்றம் குறை காணமுடியும் என்ற சிந்தனையைச் செலவளித்த வண்ணமிருக்கின்றனர்.

மற்றைய நாடுகளிலே பத்திரிக்கைகள் மக்களுக்குப் பகுத்தறிவைப் போதிக்கஉபயோகப்படுத்தப்படுகிறது. நம் நாட்டில் ஓரளவு மக்களுக்கு வேறு வகையில் பரவியுள்ள பகுத்தறிவையும் பாழ்படுத்த உபயோகப்படுத்தப்படுகிறது. விஞ்ஞான சாதனங்களை உபயோகப்படுத்திக் கொண்டே, இன்னும் அவைகளின் உதவியிலேயே விஞ்ஞான வளர்ச்சியைக் குறை கூறும் விபரீதப் போக்கு இந்நாட்டிலன்றி வேறெந்த நாட்டிலும் விளைவதேயில்லை.

இந்நிலை நீடித்துக் கொண்டேயிருக்குமானால் முடிவு எதில் நிற்குமோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. உண்மையை மறைத்துக் கூறியும், திரித்துக் கூறியும் வருகின்ற பத்திரிகைகள் நாட்டில் வலுப்பெற்று வருகின்றன். ஆனால் உள்ளதை உள்ளபடியே கூறும் ஒரு சில ஏடுகளையும் ஆளும் வர்க்கத்தினர், அவர்களுக்கு இருக்கும் அதிகாரத்தினால் அடக்கப் பார்க்கின்றனர்.

நாட்டில் எத்தனையோ இடங்களில் பட்டினிச்சாவு தாராளமாக நடந்து வருகிறது. அவைகளை மக்கள் அறியும்படி செய்வதில்லை; அப்படி அறிந்தாலும் அது பட்டினிச்சாவல்ல, வயோதிகச்சாவு, வாந்திபேதிச்சாவு என்று, அரசாங்கத்தைத் திருப்திப்படுத்தி, அரசாங்கத்தின் நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளவேண்டும் என்பதே பத்திரிகைகளின் நோக்கமாக இருந்து வருகிறது. மறைத்துக் கூறுவதாலும், திரித்துக் கூறுவதாலும் மக்களின் மனக்கசப்பைத்தான் எதிர்பார்க்க முடியுமேயன்றி ஆதரவை எதிர்பார்ப்பது அரிதாகும். நாட்டிலே உள்ள நலிவைப் போக்குவதற்கு, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டங்களையும், அந்தத் திட்டங்களுக்குஇயற்கையைஎப்படிஉபயோகித்துக் கொள்ளவேண்டும் என்பதையும் மறந்திருக்கும் அல்லது செய்யத்தவறியிருக்கும் அரசாங்கத்திற்கு அறிவுரை கூறும் வகையில் பத்திரிகைகளின் போக்கு இருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் அரசாங்கத்தின் ஆதரவு மட்டிலுமிருந்தாலே போதும் என்று எண்ணி, நாட்டிலுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அவைகளின் சக்தியைப் பிரயோகிக்காமலிருப்பது, மக்களின் வேண்டுகோள்களைப் புறக்கணிப்பதாகவே முடியும்.

தற்பொழுது உள்ள நிலை யுத்த காலத்தைவிட மோசமானது. மோசமானது என்று தெரிந்தும் அதற்கான முறையில் அரசாங்கம் தன் நிலையை மாற்றிக்கொள்ளப் பிரியப்படவில்லை. எந்த நிலை ஏற்படினும் எங்கள் போக்கு மாறாது என்பது ஆட்சியினரின் போக்கு. அந்தப் போக்கே சரி என்று தாளம் போடுவது, நாட்டிலுள்ள ஏடுகளின் போக்கு. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய் மூன்று சாதனங்கள் மிக அவசியம். அந்த சாதனங்கள் நம் நாட்டில் மிக அரிதாகிக்கொண்டுவருகிறது. உணவின்றி உயிர் விடுகின்றனர் ஒரு புறத்தில். உடையின்றி நிர்வாண ஊர்வலம் ஒரு கும்பலினர், பிச்சை எடுப்போர் என்ற பெயரில் தங்க இடமின்றி மக்கள் நாய் என அலைகின்றனர். இந்த மூன்று தேவைகளையும் பெற்றில்லாத மக்கள் கூட்டமாக மாறி வருகின்றனர் என்றால், ஏற்கனவே இல்லாத மக்களின் நிலை எவ்விதமிருக்கும் என்று எண்ணிப்பார்க்கும்படி வேண்டுகிறோம். அபிஷேகங்கள் செய்து அன்னதானம் செய்து விடுவதாலோ, சத்திரங்களையும் சாவடிகளையும் கட்டிவிடுவதாலோ, கோயில்களைக்கட்டி, குளங்களை வெட்டிவிடுவதாலோ, புதுப்பித்து விடுவதாலோ குறை தீர்ந்து விட்டது என்றோ தேவைகளைப் பூர்த்திசெய்யப்பட்டுவிட்டது என்றோ நினைப்பது மிகத் தவறு. இதுபோன்ற காரியங்களால் பொருளைச் செலவு செய்துபுண்ணியத்தைத்தேடலாமேயன்றி புத்துலகைச் சிருஷ்டி செய்து விடுவதாக ஆகாது. இது நாட்டின் இல்லாமை நிலையை நிரந்தரமாக்குவதற்கு அடிப்படையாகும். எப்படி யெனில் கைங்கரியம் என்று சொல்லிக்கொண்டு மக்களில் பலர், கையிலுள்ள பொருளை கடவுளுக்கு அர்ப்பணிக்கும் பணியில்இறங்கி விடுகின்றனர். இதுபோன்ற காரியங்களால் மக்களின் நலன் எவ்வாறுபாதிக்கப்படுகிறது என்பது விளங்கவில்லையா? மக்களின் நலன் பாதிக்கப்படும் காரியங்களை நாட்டிலுள்ள ஏடுகள் நல்ல முறையில் சித்தரித்து, பாட்டுகளை இயற்றி, பதிகங்களை வெளியிடுவதிலே பெருமை யடைகின்றன. ஆனால் அக்காரியங்களினால்

விளையப்போகும் இன்னல்களை வெளியிடுவதேயில்லை.

பகுத்தறிவுக்கு ஒவ்வாதகாரியங்களில் பணத்தை செலவளித்தல் கூடாது; கடவுள் பெயரில் காசுபறிக்கும் கூட்டமும், ஆகாது, காசைச் செலவழிக்கும் காரியமும் கூடாது என்று கூறுவோரை நாத்தீகர்கள் என்று நாக்கூசாது கூறுகின்றது நயவஞ்சகக் கூட்டம்; நாட்டில் நலிவை யுண்டு பண்ணி நாம் வாழ்ந்தால் போதும் என்று புளகாங்கிதம் கொள்ளும் புல்லுருவிக்கூட்டம்; நாட்டிலே நலிவையுண்டாக்கி எட்டிலே வலுவாக்கிக் காட்டுவதே வேலையாகக் கொண்டுள்ளது.

நாட்டிலுள்ள உண்மைநிலையையெட்டிலே எடுத்துக்காட்டி, நலிவைப் போக்குவதற்கு மக்களின் சக்தி பிரயோகிக்கப் படவேண்டுமேயன்றி, மக்களின் சக்தியை வீண்விரயமாக்கக் கூடாது.

நம் தமிழ் நாட்டின் தற்கால நிலையைப்பார்க்கும்போது பண்டைப் பெருமைகளும், செல்வநிலைகளும் நம் நினைவில் தோன்றாமலில்லை. உலகத்தினர்க்கே நாகரீகத்தைப் போதித்தது நம் நாடுதான் என்று ஆராய்ச்சி அறிஞர்களேஒப்புக்கொள்ளுகின்றனர். செல்வம் கொழுத்தநாடு என்றும் முத்துக் குளித்தநாடு என்றும் பல பல உண்டு கூறிக்கொள்ள. மேற்கத்திய நாடுகள்கூட ஒருகாலத்தில் நம்நாட்டின் நறுமணப் பொருளுக்காக பலவிதத்தில் வழி கண்டுபிடிக்க முற்பட்டன என்றும் சொல்லிக் கொள்ளுகிறோம். ஒரு கதைகூட உண்டு. முன்பெல்லாம் நம் நாட்டிலுள்ள செல்வர்கள் தங்கத்தட்டிலும், வெள்ளித் தட்டிலும் சாப்பிடுவது உண்டு. இப்பொழுதுகூட சிலர் வெள்ளித்தட்டில் சாப்பிடுகிறார்கள். இப்படிச் சாப்பிடுவதை ஒரு அய்ரோப்பியர் பார்த்துவிட்டு தன் நாட்டுக்குச் சென்று அந்நாட்டிலுள்ள மக்களெல்லாம் தங்கம், வெள்ளித் தட்டுகளில்தான் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னாராம். அவருக்குப்பின் வந்தவர் ஒருவர் இலையில் சாப்பிடுவதைப் பார்த்திருக்கிறார். அவர்பின் தன் நாட்டுக்குச்சென்று அந்நாட்டிலுள்ள மக்கள் சாப்பிட்ட பாத்திரத்தைத் திரும்பவும் உபயோகிப்பதில்லை. குப்பையில் எடுத்து எறிந்து விடுகிறார்கள் என்று சொன்னாராம். இந்த இருவரின் பேச்சையும் கேட்ட மக்கள் என்ன நினைப்பார்கள்? அந்த நாட்டிலே உள்ளமக்கள் தங்கம், வெள்ளித்தட்டுகளில் உணவு உட்கொண்டுவிட்டு, குப்பையில் எறிந்து விடுகின்றார்கள். ஆகையால் குப்பையில் கிடக்கும் தங்கம், வெள்ளித் தட்டுகளை பொறுக்கி வந்தாலே போதும் என்றுதான் எண்ணியிருப்பார்கள். இது கதையோ, உண்மையோ, அதுபற்றி நாம் ஆராயவிரும்பவில்லை. ஆனால் அந்தச் சமயங்களில் மக்களின் வாழ்க்கை நிலையையும் நாட்டின் செல்வநிலையையும் அறிய சில சான்றுகள் கிடைக்கின்றன என்றுகூற ஆசைப்படுகிறோம். இதைப்பார்க்கும் போது பொருளாதாரத்தில் மக்கள் எவ்வளவு உயர்நிலையில் இருந்திருப்பார்கள் என்று சிறிது சிந்திக்கத் தோன்றுகிறது.

பாலின் நுரையைப் போன்றும், பாம்பின் தோலைப் போன்றும் மெல்லிய ஆடைகளை அயல் நாடுகளுக்கு அனுப்பிய நாட்டில் ஆடைப் பஞ்சம், மக்கள் நிர்வாண ஊர்வலம் என்றால் அன்றைய நாட்டின் நிலை நம் மனக்கண்முன் ஊசலாடாமலில்லை. இப்படி செல்வம் பெருகிய நாட்டோடு, சில நாடுகள் வியாபார ஒப்பந்தமும் இன்னும் பலவிதத்தில் உறவு ஒப்பந்தங்களும் கொண்டிருந்தனவாம். மேற்கத்திய நாடுகளும் கிழக்கத்திய நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு ஆயிரக்கணக்கான கப்பல்களை அன்றையத் துறைமுகங்களான தொண்டி, முசிறி, காவேரிப்பூம் பட்டணம் முதலிய பட்டணங்களில் காத்துக்கிடக்கும்படி செய்ததாம் நம்நாடு. தொண்டி, முசிறி, காவேரிப்பூம் பட்டினம் முதலியவை நியூயார்க், லண்டன், பம்பாய் போன்று விளங்கின. ஆனால் அவைகள் இன்று இருந்த இடம் தெரியவில்லை. நம் நாட்டின் பண்டையப் பெருமைகளை அயல் நாட்டினர் அறிந்திருக்கும் அளவுகூட நம் நாட்டவர் அறிந்து கொள்ளவில்லை. ஏன்? அறிவிக்கப் படவில்லை என்றே கூறலாம். காரணம் நாட்டிலுள்ள ஏடுகளின் போக்கு நலிவையுண்டாக்கும் முறையிலிருப்பதால்.

எப்படி மக்கள் இன்பமாக வாழ்ந்த நாட்டில் இப்படி இன்னல்களை அனுபவிக்கின்றனர். வளமை சுரண்டப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ளதற்கும் ஏராளமான பேர் போட்டி போடுகின்றனர். உணவுப் பஞ்சம். உடைப் பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம் முதலியன தலை விரித்தாடுகின்றன. அரசாங்கமே சமாளிக்க முடியாத நிலை. சமாளிக்க முடியுமானாலும் செய்யும் பணியில் சிரத்தை காட்டாது தனி உடைமையை வலுப்படுத்துவதிலே தனிச் சிறப்பைக் காட்டுகின்றனர். இந்நிலையா? நிலவவேண்டும் நந்தமிழ் நாட்டிற்கு.

அன்று நம்நாட்டுத் துறைமுகங்களில் அயல் நாட்டுக் கப்பல்கள் ஆயிரக்கணக்கில் காத்துக்கிடந்தன என்று சொன்னோம்; இன்றும் அதேநிலை தான். வறுமை தாண்டவமாடும் நாட்டிற்கு; அந்தந்த நாடுகளில் விஞ்ஞான சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்யும் விளைபொருள்களை கொண்டுவந்து இறக்கிக் கொண்டும், அதற்கு மாறாக இந்நாட்டுச் செல்வத்தை ஏற்றிக்கொண்டும், அந்நாடுகளில் பொருளை உற்பத்தி செய்வதற்கு இந்நாட்டு மக்களை அடிமைகளாகவும் ஏற்றிக்கொண்டும் செல்வதற்குத்தான் காத்திருக்கின்றன.

வளப்பமில்லாத தமிழ்நாட்டில் வாழ வகையில்லாத மக்கள் வாழ்த்துக்கூறிவிட்டு பர்மா, மலேயா, சிலோன் முதலிய நாடுகளுக்கு ரப்பர், காப்பிதேயிலைத் தோட்டங்களுக்குக் கூலிகளாகச் செல்லுகிறார்கள். அவர்களை ஏற்றிச் செல்லத்தான் அந்த கப்பல்கள். அவர்கள் சொல்லுவது அதோ! காதில் விழுகிறது. "ஏ! தமிழ்நாடே! ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தினால் உன்வளமையும் எழிலும் போயிற்று. எஞ்சியுள்ளதற்கும் வடநாட்டு மார்வாரிக் கூட்டம் வந்துகுவிகின்றன. அவர்களுடன் போட்டிபோடப் பொருள் இல்லை; எதிர்த்துப் போரிட இளமையில்லை; வாதிட நாவில்லை; மாட்டுக்கும் பதிலாக வண்டியிழுத்தேன் இரவு பகல் ஓயாமல் உழைத்தேன்; வாழ்க்கை வளம் பெறவில்லை; வறுமை நீங்கிய பாடில்லை; எஞ்சியுள்ளது எலும்பும் தோலும்; உயிர் மட்டிலும் ஊசலாடுகிறது. இதுதான் நான் பிறந்த நாட்டில் கண்ட காட்சி. அதனால்தான் இதோ போகிறேன் கண்காணாச் சீமைக்கு" என்று சிந்திய மூக்குடன் சொல்லிக் கொண்டே போகிறான். இதுஇன்றையத்தமிழ் நாட்டின் நிலை.

மலேயாவில் 'ரிக்ஷா' வண்டியிழுத்து வயிறு வளர்த்துக் கொண்டிருந்த சீனர்களை சீனசர்க்கார் பிடித்து, அவர்களை அத்தொழிலை ஒழிக்கச் செய்து, அவர்களுக்குத் தக்க பொருளுதவி செய்து, தாயகத்திற்கு அழைத்துச் சென்று தொழில் சாலைகளில் தக்க வேலைக்கமர்த்துகின்றனர். ஆனால் நம் நாடோ அப்படிப்பட்ட காலியிடங்களுக்கு ஆட்களைக் கொடுத்துதவுகிறது. நாட்டின் நிலை இதுவாக இருக்க, அந்த நாட்டை ஆளும் அரசாங்கம் கண்மூடித்தனமாகக் கடமையைச் செய்கிறது என்றால் அந்த ஆட்சியை என்ன என்று கூறுவது. அந்த நிலைதான் நல்லநிலை என்று ஏத்தி எழுதுவதிலே அந்த நாட்டு ஏடுகள் ஈடுபட்டிருக்கின்றன என்றால் அவைகளின் போக்கை என்ன என்று கூறுவது. நாட்டின் நலிவைப் போக்க ஏடுகள் இறங்க வேண்டும். நலிவிலே வலிவு காணுவது நல்லதல்ல. வலிவிலே நலிவு கண்டு திருத்த முயலவேண்டும். அப்பொழுதுதான் நாட்டின் நலிவை எட்டால் போக்க முடியும். அதுதான் சரியுங்கூட. முயல்வாரா! முனைவாரா? ஏட்டினர்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE